
வெற்றிமணி வெளியீடு 24

# சிவத் தமிழ்

Free Circulation
இலவசம்

பிரபஞ்ச இரகசியம்!

## யேர்மனியில் சர்வ மதங்கள் சங்கமம்!



## அன்னைக்குச் சமர்ப்பணம்

பிரதம ஆசிரியர்:
கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

2013



# “சிவத்தமிழ்”

# அன்னைக்குச் சமர்ப்பணம்

**திருமதி .நவநிதி சுப்பிரமணியம்**

**11.03.1920- 03.10.2013**

இறைவன் தனக்குப் பதில் தாயைத் தேர்ந்து
எடுத்தது இதற்காகவே ஏனெனில் குழந்தைகள்
அவன் சொத்து இறைவனின் மிகச் சிறந்த
ஊழியன் இந்தஅம்மா என்னும் தேவதை

## அன்னை எழுதிவைத்து வாழ்ந்து காட்டியவை!

**சோம்பல் வறுமை தரும், முயற்சி உயர்ச்சி தரும்.**

பிள்ளைகளை வளர்க்கும் போது நெஞ்சினில் அன்பு, கையினில் கம்பு, கொண்டு வளர்க்க வேண்டும்.

**எல்லாம் அவன் செயல், என்னை இயக்கும் அந்த சக்தி என்னை வழி நடத்துகின்றது.**

இன்று என் வாழ்க்கை உமக்கு நான் செய்யும் ஆராதனையாக அமையட்டும்.

**தினமும் படுக்கையை விட்டு எழும்பும் போது 2 நிமிட பிரார்த்தனை செய்யுங்கள், உங்களைப் படைத்தவனுக்காக இந்த நேரத்தை ஒதுக்கலாம்.**

இறவைா இன்று உமது விருப்பத்தை நிறைவேற்ற எவ்விதம் நீர் விரும்புகிறீரோ அவ்விதம் என்னைப் பயன்படுத்துவீராக.

**அனைத்திலும் ஆண்டவனைக் கானுங்கள். அனைவரிடமும் அனைத்திடமும் ஆன்மீக அளவில் ஒருமைப்பாட்டை உணருங்கள்.**

மற்றவர்களிடமிருந்து நீங்கள் வேறல்ல, உங்களிடம் உள்ள வாழ்க்கைத் தத்துவத்தின் வேறோரு பெயரே கடவுள். இதை வாழ்க்கை என்று அழையுங்கள்.

**என்றும் உள்ளது எங்கும் நிறைந்தது. சர்வம் சிவமயம், சர்வம் சிவன் செயல்.**

# சிவத் தமிழ்

அன்பே சிவம்! சிவமே தமிழ்!!

மலர் 9 2013 இதழ் 24





ஆரம்பம் 2004

பிரதம ஆசிரியர்
கலைஞானமணி
கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Tel.02351 458862
e.mail. vettimaniy@hotmail.com

உதவி ஆசிரியர்
ஆன்மீகத்தென்றல்
த.புவனேந்திரன்

கௌரவ ஆசிரியர்
கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்
திரு.பொ.கனகசபாபதி
(முன்னாள் அதிபர் மகாஜனாக்கல்லூரி)
இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்

வெளியீடு
**Dr.M.K.S.Sivakumaran.B.F.A**
Brinker Höhe 13
58507 Lüdenscheid - Germany
Tel.02351 458862

கனடா
Dr.Kathir.Thuraisingam
31 Gennela Sqare
Toronto,On
M1B 5A3
Canada

இலங்கை
திருமதி.வலன்ரீனா இளங்கோவன்.M.A
தபால்பெட்டி ஒழுங்கை
பலாலிவீதி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
யாழ்ப்பாணம்


# இனிய சங்கமம்





## ஞான நெற்றி

குறைகளையும் நிறைவாக எண்ணி மனநிறைவு கொள்ளும் பக்குவமும் ஆண்டவன் படைப்பில் எதுவும் குறையில்லை என்று எண்ணும் தைரியமும் உளமாரவந்துவிட்டால் எமக்கு எதிலும் எதிர்மறை யான சிந்தனைகள் வரமாட்டாது.

வாழ்வின் பெரும் பகுதி எமக்கு எதிர்மாறான எண்ணங் களே, வாழ்வின்மீது வெறுப்பையும், பயத்தையும் ஊட்டுகின்றன.

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சிறப்பு இயல்பு இருக்கும். செவிப்புலன்,கண்பார்வை இப்படி ஏதேனும் குறைந்த வர்களை அவதானித்தால் அவர்களுக்கு சாதாரண மனிதர்களைவிட அதிகூடிய அவதானசக்தி இருப் பதைக்காண முடியும்.

ஏன் மின்சாரத்தைக் கண்டுபிடித்த தொமஸ் எடிசன் செவிப்புலன் அற்றவர்தான்.

நானும் எனது தாயாரும் ஸ்கைப்பில் கதைப்போம். எனக்கும் அம்மாவிற்கும் பரந்த நெற்றி. இப்போ எனக்கு வயதாக முன்நெற்றியில் மயிரும் குறைவு.

ஸ்கைப்பில் நான் முட்டுமுட்டு என அம்மாவின் நெற்றியுடன் முட்டுவேன். அம்மா நெற்றியைப்பாத்து விட்டு டேய்! எனக்கும் உனக்கும் ஞான நெற்றி என்பார். ஞானம் உள்ளதோ இல்லையோ குறை யேதும் இல்லை என்றாகிவிடுகிறது அல்லவா.


அதுமட்டுமா? இன்று பலருக்கும் வண்டித்தொல்லை அதிகம். அதனைப் பெரும் குறையாக குறை! குறை! என்று பலரும் அடம்பிடிப்பிப்பார்கள். வண்டிக்கு தனிச் சில்லுப்பூட்டவேண்டும் என்றும் நக்கல் அடிப்பார்கள்.


ஆனால் தாயுள்ளம் அணுகும் விதத்தைப்பாருங்கள் "மகனே வண்டியைக் குறையடா கண்ணூறு பட்டுவிடப் போகிறது" என்பா.

கடவுளுக்குப்பின் தாயா! அல்லது தாய்க்குப்பின் கடவுளா!! என்று குழம்பவைக்கும் தாயன்பு. இறைவன் இப்போது எல்லாம் நேரில் வருவதில்லை என்பவர்கள், ஒரு முறை உங்கள் அன்னையை உற்றுப்பாருங்கள் அன்னை யார் என்று தெரியும்.

மு.க.சு.சிவகுமாரன்

# டார்வின் விஞ்ஞான பூர்வமாகச் சொன்னதை திருமூலர் எப்படிச் சொல்கிறார் பாருங்கள்!





Where there is a creation there must be a creator அந்த creator தான் கடவுள் இதற்கு ஓஷோ ஒரு முறை பதில் சொல்லியிருந்தார். அந்த ஓஷோவின் சொற்பொழிவில் அவரிடம் கேட்க்கப்பட்ட கேள்வி கடவுள் இல்லை என்று நிஜமாகவே நம்புகின்றீர்களா? ஓஷோவின் நிதானமான பதில்.கடவுள் என்பவர் இல்லை.எனக்கு இது உறுதியாகத்தெரியும். அப்படி ஒருவர் இல்லை என்பதற்காக அந்தக் கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள். கடவுள் என்னும் ஒருவரின் இருப்பு நிறையப்பிரச்சினைகளை ஏற்படுத்தும் மேலும் இது விஷயமாகப் பேசும் போது அவர் சால்ஸ் டார்வினின் சித்தாந்தத்தை கையில் எடுத்து ஒரு அருமையான விளையாட்டு ஆடி யிருப்பார்.

படைப்பு என்பது, ஒரு படைப்பாளியால் செய்து முடிக்கப்பட்ட வேலையாகும். அவர் அந்த வேலையை முடித்துவிட்டு வேறு வேலை பார்க்கப்போய்விடுவார்.

அந்தப்படைப்பு தன்னளவில் எந்த மாற்றமும் இல்லாது இருக்கும். ஆனால் இந்த உலகம். அப்படிப்பட்ட ஒரு படைப்புக்கிடையாது.

டார்வினின் தத்துவப்படி இந்த உலகம் தன்னளவில் பரிணாம வளர்ச்சி (evolution) அடைந்துகொண்டே இருக்கிறது. இனியும் அப்படித்தான் இருக்கும். இந்தப் பரிணாம வளர்ச்சி ஒரு பரிபூரண நிலையை தன்னுடைய இலக்காக நோக்கிப் பயணம் செய்கின்றது. அந்தப் பரிபூரண நிலை ஒரு நாளும் கிட்டப் போவதில்லை. இந்த வளர்ச்சி தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். அதனால் இந்த உலகத்தை creator creativity என்று தொடர்பு படுத்தி பேசுவது பொருத்தமில்லாதது இது ஓஷோவின் வாதம்.

ஓஷோவின் இந்த வாதத்திற்கு பதில் கிடைக்குமா என்று தேடினால் அந்தப்பதில் திருமூலரிடம் இருக்கிறது.

**அளவில் இளமையும் அந்தமும் ஈறும்**
**அளவியல் காலமும் நாலும் உணரில்**
**தளர்விலன் சங்கரன் தன்னடி யார்சொல்**
**அளவில் பெருமை அரியற் காமே.**

டார்வின் விஞ்ஞான பூர்வமாகச் சொன்ன விஷயத்தை திருமூலர் எப்படிச்சொல்கிறார் என்று பாருங்கள்.-

இந்த உலகம் தன்னளவில் எப்பொழுதும் இளமையாகவும் அழகோடும் ஒரு எல்லைக் குள்ளேயும் இருக்கின்றது. Evolution என்பதை எவ்வளவு அழகாகச்சொல்கிறார்! உலகம் தோன்றி கோடிக்கணக்கான வருடம் ஆன பிறகும், நாம் யாரும் இது பழைய உலகம், இந்த உலகிற்கு வயசாகிவிட்டது என்று சொல்வதில்லை.

டார்வினின் வார்த்தையில் இது evolution , திரு மூலர் சொல்வது எப்போதும் இளமை. அது மட்டுமில்லை, இந்த உலகத்தின் அழகு (அந்தம்) எப்போதுமே குறையாமல் இருக் கின்றது.

இதன் வளர்ச்சியில் எல்லாமே ஒரு ஒழுங்கு இருக்கின்றது. அதைத்தான் எல்லை (ஈறு) என்கிறார்.

இதுபற்றி கீதையிலும் வியந்துபேசப்படு கின்றது. இன்னொரு விஷயம் திருமூலர் இந்தப்பாடலில் சொல்வது அளவியல் காலம். இந்த உலகம் இது வரை இருந்த காலம் இனி இருக்கப்போகும் காலம் இதெல்லாம் கணக்கிட முடியாது எல்லையில்லாததும் ஆகும்.

இதையெல்லாம் சொல்லிவிட்டு திருமுலர் வைக்கும் அதிரடி வசனம் இதுதான்.- இந்த விஷயங்களை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

"அந்தச் சங்கரன் எவ்வளவு சோர்விலாதவன்" என்பது உங்களுக்குப் புரியும். Got it?

படைப்பில் பல குழப்பங்கள் வரலாம் என்று தெரிஞ்சுதான் நம்மவர் எப்பவுமே படைத்தல் காத்தல் அழித்தல் இந்த மூன்றையும் சேர்த்துச் சொல்வர்.

# மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்!



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

மனித வாழ்க்கையைப் பற்றி இப்போது பல தேடல்கள் நடைபெறுகின்றன. இன்றைய வேகமான மனித வாழ்வியலின் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக ஆய்வுகளும் மேற்கொள்ளப் படுகின்றன. ஆனால் மனித வாழ்வியல் இன்னமும் சீராகவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது. இது பல்வேறு பண்பாட்டை யுடையவர்களின் பொதுவான நிலைப்பாடாகவும் மாறி வருகிறது. குறிப்பாகத் தமிழர் பண்பாட்டில் இம்மாற்றம் வேகமாகவே பரவி வருகிறது. தமிழர் தமது தாயகத்தை விட்டு வெளியேறிப் பல்வேறு நாடுகளிலே புலம் பெயர்ந்து வாழ்கின்றனர். எனவே அவர்கள் வாழிடப் பண்பாட்டையும் மதித்து வாழ வேண்டிய நிலையில் உள்ளனர். அதிலும் சிறப்பாக வாழிட நாட்டுக்குடியுரிமை பெற்றவர் களும் அவர்களுடைய அடுத்த தலைமுறை யினரும் பண்பாட்டைப் பேணும் நிலையில் பெரிதும் குழப்பத்திற்கு உள்ளாகின்றனர்.

இந்நிலையில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர் தமது முன்னோர் வகுத்த பண்பாட்டு வாழ்வியலைப் புறந்தள்ளவும் முற்படுகின்றனர். அதனால் தாம் தமிழரின் தலைமுறையினர் என்ற அடையாளத்தையும் இழந்து விடுகின் றனர். எனினும் அவர்களுடைய வாழ்வியலிலே மன அழுத்தமே படர்ந்துள்ளது. இன்றை தலைமுறையினர் இது பற்றி எண்ணிப் பாராமல் ஓடிக்கொண்டிருக்கின்றனர். மனித வாழ்வியலின் உறுதியான தளமான குடும்பம் என்ற கட்டமைப் பைத் தெளிவாக உணரா மலிருக்கின்றனர். தமிழர் பண்பாட்டில் குடும்பம் என்ற கட்டமைப்பு, தனிமனித வாழ்க்கையைப் பொதுநல வாழ்க்கையாக வளர்த்துச் செல்லப் பெரிதும் உறுதுணையாக நிற்பது.

குழந்தையாக மண்ணிலே பிறக்கும் மனிதன் சான்றோனாக நாட்டு மக்களில் ஓர் அங்கமாகக் குடும்ப வாழ்க்கையே அவனைப் பயிற்றுகிறது. தன்னைச் சுற்றியுள்ள உறவுகளையும் நட்பு களையும் அவன் அறிவதற்குக் குடும்பமே வழிகாட்டுகிறது.

திருமணம் என்னும் நடைமுறை தமிழர் பண்பாட்டில் குடும்பம் என்னும் கட்டமைப்பின் கால்கோள் விழாவாக அமை கிறது. இந்த விழாவிலே உற்றார், உறவினர், சுற்றத்தார், நட்பாளர் என அனைவரும் ஒருங்கிணைந்து ஓர் ஆணையும் ஒரு பெண் ணையும் கணவனும் மனைவியும் எனப் பிணைத்து அவர்களைக் குடும்ப வாழ்க்கையில் இணைத்து விடுகின்றனர். அத்திருமணவிழா விலே முதிர்ந்த மனநிறைவான குடும்ப வாழ்க்கையை நடத்துபவர் இளம் மணமக் களை வாழ்த்துவர். மணமக்களின் மனதிலே அவர்கள் குடும்பமாக மனமகிழ்ச்சியோடு நிறைவாக வாழ்ந்த வாழ்வு ஒரு நம்பிக்கையை ஊட்டுகிறது.

திருமணத்தால் இணைந்தவர்களை எவ்வாறு வாழ்த்துவது என்ற வினாவும் இன்று தோன்றியுளது. அறுகையும் அரிசியையும் கையிலெடுத்து மூன்று தலைமுறையோடு வாழும் முதியவரும் அவர் மனைவியும் மணமக்கள் தலையிலிருந்து கால்வரை அறுகையும் அரிசியையும் தூவி வாழ்த்துவர். அறுகும் அரிசியும் ஏன் பயன்படுத்த வேண்டும்?

என்பது இன்றைய வினாவாகிவிட்டது. மண்ணிலே ஆழவேரூன்றி அகலப்படரும் அறுகம்புல் வயல் வரப்பை அழியாமல் காக்கும் பணியைச் செய்வது. குடும்பம் என்னும் கட்டமைப்பும் மணமக்களால் அழிக்கப்படாது என்றென்றும் காக்கப்படவேண்டும். அரிசி உணவின் முக்கிய தானியம். அன்று, தொழிலின் பெறுபேறாக விளங்கியது.

உழவுத்தொழிலால் பெற்ற உணவுப்பண்டம். அதுவும் குடும்ப நிலையில் என்றென்றும் பேணப்பட வேண்டும். குடும்பத்தின் இறுக்கமான இணைப்பும் தொழில் வளமும் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என வாழ்த்துவது தான் அன்றைய நடைமுறையாக இருந்தது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ மண்ணிலே வளரும் அறுகும் நெல்லரிசியும் குறியீட்டுப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டன.

அவையிரண்டையும் மஞ்சள் பொடியுடன் கலந்தே தூவி வாழ்த்தினர். மஞ்சள் பிணியகற்றும் ஒரு மருந்துப் பொருள். எனவே உடல் நலமும் பெற்று வாழவேண்டும் என்ற பொருளும் உள்ளடங்கி இருந்தது உணரப்பட வேண்டியது.

இன்றைய திருமணவிழாக்களில் மணமக்களை வாழ்த்துவதென்னும் நடைமுறை பொருளற்றுப் போய்விட்டது. திருமணமாகாத இளையவரும் அறுகரிசியை எடுத்து மண மக்கள் தலையிலே விதைக்கிறார்கள்.

அவர்களின் அறியாமையைப் போக்க எவரும் முயற்சிப்பதில்லை. மணமக்களிடம் பரிசுப் பொருள் கொடுக்க அவர்கள் போகும் போது முன்னால் உள்ள தட்டிலுள்ள அரிசியை எடுத்து வாயில் போடும் நடைமுறையும் புதிதாகத் தோன்றியுளது.

இன்றைய இளையவர் பார்வையில் வாழ்த்து என்பது என்ன வென்று தெரியாத குழப்பநிலை. இதைப் போக்க இப்போதே ஆவன செய்ய வேண்டும். திருமணவிழாவிலே முதியவர்களே மணமேடையில் வாழ்த்த வேண்டும் என்ற பண்பாட்டு மரபான நடைமுறையை அவர்கள் நன்குணரச் செய்ய வேண்டும். திருமண விழாவிலே மணமக்களை வாழ்த்தும் போது முன்னோருடைய பாடல்களைப் பாடி வாழ்த்தும் நடைமுறையும் வழக்கிலுள்ளது. அவற்றுள் குறிப்பாகத் திருஞானசம்பந்தர் பாடிய பின்வரும் பாடல் இடம் பெறும்.

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை**
**கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகையிருந்ததே.**

இப்பாடலுக்கும் திருமணவாழ்த்துக்கும் என்ன தொடர்பு என எண்ணுவோரும் உளர். உண்மை யில் இப்பாடல் ஒரு நல்ல குடும்பத்தை வாழ்த்தும் பாடலென்பதைப் பலர் உணராதிருக் கின்றனர்.

சம்பந்தர் இப்பாடலைப் பாடிய சூழ்நிலை அதனைத் தெளிவாக விளக்கி நிற்கிறது. ஞானசம்பந்தர் மதுரைக்குச் சென்றிருந்தபோது சீர்காழியிலிருந்த அவருடைய தந்தையார் திருவாலவாய் திருக்கோயிலுக்கு வருகிறார். அங்கு இறைவனை வழிபட்ட பின்னர் சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குச் செல்கிறார்.

அப்போது சம்பந்தர் தந்தையை வணங்கி நின்ற காட்சியைப் பெரிய புராணத்திலே சேக்கிழார் சொற்சித்திரமாக்கிக் காட்டுகிறார். தந்தை யாரைக் கண்டவுடன் சம்பந்தருக்குத் திருத்தோணிபுரத்து இறைவனது பாதங்கள்



நினைவுக்கு வருகிறது. தன்னை அறியாப் பருவத்தே எடுத்தாண்ட பெருந்தகை எம் பெருமாட்டியுடனிருந்ததே என வியந்து வாழ்த்துகிறார்.

பெண்ணில் நல்லாளொடு தோன்றிய பெருந்தகையால் தனது துன்பந் தீர்ந்து தேவாரம் பாடும் ஆற்றல் பெற்றதையும் சம்பந்தர் நினைக்கிறார். அதனால் தான் பெற்ற பக்தியனுபவம் பலரை இறைபக்தியிலே ஈடுபடுத்தக் கிடைத்த வாய்ப்பு. எல்லாவற் றையும் நினைக்கும் போது கழுமலவளநகரிலே உறையும் இறையை வாழ்த்திப் பாடவேண்டும் என விரும்புகிறார்.

மண்ணிலே தான் நல்ல வண்ணம் வாழ்வ தற்குக் காரணம் பெண்ணில் நல்லா ளொடும் பெருந்தகை இருந்ததே என நம்புகிறார்.

தாயும் தந்தையுமாக நின்றருளிய இறைவனை யும் இறைவியையும் எல்லோருக்கும் நினை வூட்டுகிறார். நாள்தோறும் நல்ல வாழ்க்கை வாழலாம். இறைவனை எண்ணினால் நல்ல நிலையை அடையலாம். இதுவே எல்லோரும் தேடுவது.

எனவே சம்பந்தருடைய இப்பாடல் வாழ்க்கை யை இணைந்து வாழத் தொடங்கும் மணமக் களை வாழ்த்துவதற்கு ஏற்றதாக அமைந் துளது. குடும்பக்கட்டமைப்பின் கால்கோள் விழாவிலே நம்பிக்கையென்னும் பிணிப்பினால் மணமக்கள் ஒன்றுபட்டுச் செயற்பட எண்ணம் தோன்றும்.பெண்ணின் நல்லாளாகவும் பெருந் தகையாகவும் மணமகளும் மண மகனும் சிறப்புடன் வாழப் பாடலும் வழிகாட்டி நிற்கும். தமிழர் பண்பாட்டில் திருமணத்தின் சிறப்பு நிலையை எல்லோரும் அறிய வைக்கும்.

# இந்தியாவில் உள்ள புகழ்ப்பெற்ற குகைக்கோயில்கள்!!!


எல்லோரா குகைகள்


அஜந்தா குகைகள்


உதயகிரி குகைகள்


எலிபண்டா குகைகள்


அமர்நாத் குகைக்கோயில்


படலீஸ்சுவரர் குகைக்கோயில்


வராகா குகைக்கோயில்

இந்தியா என்றாலே அனைவருக்கும் பண்பாடு, கலாச்சாரம் தான் நினைவுக்கு வரும். அத்தகைய இந்தியா சிற்பக்கலையிலும் மிகவும் சிறந்தது. அதனால் இன்றும் நிறைய மக்கள் இந்தியாவிற்கு வந்து அத்தகைய இடங்களை பார்ப்பதற்கு பல நாடுகளிலிருந்தும் வருகின்றனர். மேலும் இங்கு பல நூறு வருடங்களுக்கு முன் கட்டப்பட்டிருக்கும் கோயில்கள் நிறைய உள்ளன. அத்தகைய கோயில்களில் உள்ள சிற்பங்கள் அனைத்துமே, இந்திய நாட்டின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை நன்கு வெளிப்படுத்தும். அவ்வாறு வெளிப்படுத்தும் கோயில்களில் குகைக்கோயில்கள் சிலவற்றை யாராலும் மறக்க முடியாது. இன்றும் அது நம் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் தளமாக உள்ளது. மேலும் குகைக்கோயில்கள் என்றாலே அது பாறைகளால் ஆனது என்பது நன்கு தெரியும். அதிலும் அந்த கோயில்களில், ஒரு கோயிலை எடுத்தாலே அதில் பல அடுக்குகள் இருக்கும். அதனைப் பார்க்கும் போது, எவ்வாறு தான் அதனை வடிவமைத்தார்களோ என்று நம்மை சிந்திக்கும் வகையிலும், ஆச்சரியப்படுத்தும் வகையிலும் இருக்கும். மேலும் சில கோயில்களில் நுழைந்தால், எப்படி வெளியே வருவது என்று கூட தெரியாது. அந்த அளவில் சில குகைக்கோயில்களின் அமைப்புகள் இருக்கும். இப்போது அந்த மாதிரியான குகைக்கோயில்களில் நம் பாரம்பரியத் தளமாக இருக்கும் குகைக்கோயில்களுள் ஒரு சிலவற்றைப் பற்றியும், அது எந்த நூற்றாண்டில் செதுக்கப்பட்டுள்ளது என்பதையும் பார்ப்போமா!!!

1.
எல்லோரா குகைகள் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் சரநந்திரி மலையில் 30-க்கும் மேற்பட்ட குகைகள் வெட்டப்பட்டுள்ளன. இந்த எல்லோரா குகைகள் மஹாராஸ்ட்ராவில் அமைந்துள்ளன. இதனை இந்து, ஜெயின் மற்றும் புத்த மதத்திற்காக

2.அஜந்தா குகைகள் இந்த குகையும் மஹாராஸ்ட்ராவில் உள்ளது. இதனையும் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பினர் (UNESCO) உலக பாரம்பரிய தளமாக தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த அஜந்தா பாறை வெட்டுக் குகைகள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து உருவாக்கத் தொடங்கியது.

3.உதயகிரி குகைகள் மத்திய பிரதேசத்தில் உள்ள உதயகிரி குகைகளின் பாறை வெட்டுக்கள், குப்தப் பேரரசின் ஆட்சி காலத்தில் இரண்டாம் சந்திர குப்த பேரரசரால் கட்டப்பட்டது. அதிலும் இந்த குகைகள் கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டிலிருந்து கட்டப்பட்டது.

4எலிபண்டா குகைகள் மும்பை துறைமுகப் பகுதியில் உள்ள தீவில் அமைந்துள்ள எலிபண்டா குகைகள், இந்து மற்றும் புத்த மதத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்த சிற்பங்கள் அனைத்தும் 5 மற்றும் 8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் செதுக்கப்பட்டுள்ளது

தொடர்ச்சி மறுபக்கம்

5.அமர்நாத் குகைக்கோயில் ஜம்மு மற்றும் காஷ்மீரில் அமைந்துள்ள அமர்நாத் கோயில் கடவுள் சிவனுக்காக, 3 ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டுள்ளது. இதன் சிறப்பு இங்கு ஐஸ்கட்டியால் ஆன சிவ லிங்கம் இருப்பதேயாகும். இந்த அமர்நாத் குகைக்கோயில் சிறந்த சிவ ஸ்தளங்களில் ஒன்று.



6.படலீஸ்சுவரர் குகைக்கோயில் பூனாவில் உள்ள படலீஸ்சுவரர் குகைக்கோயில் ஒரே ஒரு பாறையால் செதுக்கப்பட்டுள்ளது. அதுவும் இந்த இந்து குகைக்கோயில் 8 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளது.

7,வராகா குகைக்கோயில் தமிழ்நாட்டில் உள்ள இந்த வராகா குகைக்கோயில் 7 ஆம் நூற்றாண்டின் முதலில் இருந்து, ஒரே மாதிரியாக இருந்து வரும் ஒரு வெட்டுப்பாறை. இந்த குகைக்கோயிலில் நான்கு தூண்கள் இருப்பதோடு, இது இந்து கடவுளான விஷ்ணு மற்றும் அம்மனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.







## மண்! பொன்!! பெண்!!! இவைகளை நினைத்தாயா?

குழப்பத்துடன் இருந்த சீடனின் நிலையை அறிந்த மகான் அச்சீடனை தண்ணீருக்குள் அழுத்தினார். அவனை உள்ளே திண்டாடவிட்டு கடைசியில் வெளியே எடுத்தார்.

“உள்ளே இருந்தபோது மண், பொன், பெண் இவைகளை நினைத்தாயா?““ என்று கேட்டார். “ஐயோ,நினைக்கவே இல்லை. மூச்சுக்கு வழி கிடைக்காதா என்றுதான் ஏங்கினேன், துடித்தேன்,” என்றான்.

மண்ணும் பொன்னும் சிகிச்சைக்குப் பணம் கொடுக்குமே தவிர சிகிச்சை செய்யாது.

அந்தக் கடைசி நேரத்தில், நாம் உலகை விட்டுப் பிரியும் நேரத்தில் மண்,பொன் எல்லாமே நமக்கு அற்பமாகத் தோன்றப் போகிறது. அந்த நினைப்பை சற்று முன் கூட்டியே கொண்டு வந்தால் என்ன?

நாம் அறிவாளியாகவும், முன் எச்சரிக்கைஉடையவராகவும் இருந்தால் அதைத்தான் செய்வோம்.

**-அழகிக்கு ஆயிரம் நாமம் என்ற நூலில்.**

# யேர்மனியில் சர்வ மதங்கள் சங்கமம்!

## மதங்களின் வழிகள் வேறு, வேறு, ஆனாலும் சேருமிடம் ஒன்று!








ஜேர்மனி ஹம் நகரிலே West Heringen, Dortmunder Str வில் ஹம் நகரசபை பெரிய அழவிலான நிலத்தை ஒதுக்கி அதில் லிப்பே பூங்கா (Lippe Park) என்ற பெயருடன் பூங்கா ஒன்றை அமைத்துவருகின்றது.

இங்கு ஐந்து மதச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட வாசல்கள் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளன. கிறீஸ்தவ, இந்து, முஸ்லீம், பகாய், யூத மதச் சின்ங்களை அங்கு காணலாம். இவற்றைப் பார்க்கும் போது எல்லா மதங்களின் வழிகளும் வெவ்வேறாக இருந்தாலும் அவை வந்தடையும் இடம் ஒன்று என்பதனைச் சொல்வதுபோல் நுழைவாசலில் எல்லாமதங்களும் அணிவகுத்து ஒன்றாக நிற்கின்றன.

வெகு விரைவில் இப் பூங்கா மிகப் பிரபல்யம் அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தகவல்: ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன்.

# அம்மாவும் நீயே!

**இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்**



என்னை எனக்குப் பிடித்தவனாக நான் இருக்கும்போதெல்லாம் இந்த உலகம் எனக்கு இனிமையானதாகத் தோன்றுகிறது.
என்னை எனக்குப் பிடிக்காதவனாக நான் மாறிவிட நேரும்போதோ இந்த உலகமும் எனக்குக் கசப்பானதாக.மாறிவிடுகிறது.
எனக்குப் பிடித்தவனாக நான் இருக்கும்போது என்னைச் சூழ இருப்பவர்களெல்லாம் எனக்குப் பிடித்தமானவர்களாக இருக்கிறார்கள்
என்னைப் பிடிக்காதவனாக நான் மாறிவிட நேரும் தருணங்களில் எல்லாம் என்னருகே இருப்பவர்களுக்கெல்லாம் என்னைப் பிடிக்காது போய்விடுகிறது!
ஆயினும்-
எல்லாப் பொழுதுகளிலும் - எனக்குப் பிடித்தவர் களையும் சரி என்னைப் பிடிக்காதவர் களையும் சரி எல்லோரையும் நான் அளவுக்கதிக மாகவே நேசித்திருக்கிறேன் -நேசிக்கிறேன் என்பதே உண்மை.

பிடித்தமானது என்பது பற்றுக்கொள்வது.
மனம் ஒன்றைப் பற்றிக்கொள்வது.

பற்றுக்களை அறுத்துக்கொள்ளும் தருணத்தி லேயே மனிதன் முக்தி பெறுவது சாத்திய மாகிறது என்று முன்னோர்கள் சொல்லி வைத்தது உண்மையாக இருக்கலாம் .ஆனால் அவ்வாறு பற்றுக்களை அறுத்துக்கொள்ளும் கணத்தில்கூட முக்திக்கு இலக்கானவனாகத் தோன்றும் இறைவனின் மீதும் பற்றுக்கொள்ள வேண்டியவர்களாகத்தானே இருக்கிறோம் என்பது
வியப்பளிப்பதாக இல்லையா?
ஏதோ ஒன்றில் பிடிப்புள்ளவரைதான் வாழ்வு அர்த்தமுள்ளதாகிறது.
உன்னோடு நானும் என்னோடு நீயும் உறவு கொள்வதற்கு ஒரு பிடிப்பு இருந்தாகவேண்டும். ஒருவர்க்கொருவர் பிடித்தமானவர்களாக இருந்தாகவேண்டும்.
ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இது அவ்வாறு இருப்பதில்லை.
ஒருதலைப் பட்சமான அன்புதான் உலகில் மிக அதிகம்.
எனக்குப் பிடித்தமானவர்களின் எண்ணிக்கை யைவிட என்னைப் பிடிக்காதவர்களின் எண் ணிக்கையே அதிகம் என்று எண்ணத்தக்க தாகவே பெரும்பாலானோரின் வாழ்வு தொடர் கிறது.
தொப்புள்கொடி உறவு என்று தொடங்குகின்ற தாய் பிள்ளை உறவில் யார் யாருக்கு அதிகம் பிடித்தமானவர்களாக இருக்கிறார்கள்?
அம்மாவுக்கு பிள்ளையா? பிள்ளைக்கு அம்மாவா?
தாய்ப்பாசம்போல் உலகில் உயர்ந்தது எதுவு மில்லை என்பதும் ஒருவனுக்குத் தாயைவிட மேலானது எதுவுமில்லை என்பதும் உலகம் எங்கணும் காணப்படும் பொது நிலை.
ஆனால் அது எந்தளவுக்குச் சாத்தியப் படுகிறது?
தன் வாழ்நாள் முழுதும் தன் பிள்ளையை நேசிக்க ஒரு தாயால் முடிவதுபோல் தன் வாழ்நாள் முழுதும் தன் தாயின்மீது பாசம் காட்ட ஒரு மகனாலோ மகளாலோ முடிகிறதா?
ஒவ்வொருவர் வாழ்விலும் பருவங்கள் மாற மாற பாசங்களும் மாறிப்போய்விடுகின்றனவே!
உலகவாழ்வில் உயரியதாகக் கருதப்படுகின்ற தாய் - பிள்ளை உறவுக்கே இந்நிலை என்றால் ஏனையவவை எம்மாத்திரம்?
பெற்றவள் உயிரோடிக்கிறவரை அவளைப் பராமரிக்க மறந்து அவள் இல்லாத காலத்தில் அவளைப் புகழ்ந்து தள்ளுவதிலும், „அம்மா! உனக்கு நான் அதைச் செய்திருக்கவேண்டும் இதைச்செய்திருக்கவேண்டும் ஆனால் எதற்கும் நான் நாதியற்றுப் போனேனே. இப்போது உன்னை எண்ணித் துடிக்கிறேனே!“ என்று கவிதை பாடுவதிலும் கழிவிரக்கம் கொள்வ திலும் காலத்தைக் கழிக்கின்ற மக்களைத் தானே நாம் அதிகம் சந்திக்கிறோம்.
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றும், தாயிற்சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்றும் பெருமை பாராட்டும் அளவுக்கு அவர்களைப் பேணிப் பாதுகாக்க எல்லாப் பிள்ளைகளாலும் முடிவ தில்லை என்பதே யதார்த்தம்.

தொடர்ச்சி 19 ம் பக்கம்




**திருமதி. செ. சுப்பிரமணியம்**
இளைப்பாறிய ஆசிரியை

இவர்யார்? எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர். இவர் யார்?. இவர்தான் உலகையாழும் சக்தி. இவர்தான் இமைப்பொழுதும் எம்நெஞ்சில் நிலைகொண்டு எம்மை இவ்வுலகில் வாழவைக்கும் அருள் சக்தியாக விளங்குகிறார். இவரது நிலைப் பாட்டினால்தான் உலகில் உள்ள அனைத்து ஜீவகோடிகளும் இயங்குகின்றன, உயிர் வாழ்கின்றன.

இவரது சக்தி நீங்கி விட்டால் பட்டமரமாகவே பயனற்றுப் போகவேண்டியதே. மரம்தான் பட்டுப் போனால் அது இன்னொரு பொருளாகமாறி இன்னுமொருதேவைக்கு உதவும். ஆனால்! மனிதரைப்பொறுத்தவரை அது எவருக்குமே உதவாத பொருளாகிவிடும்.

இந்த உண்மையை எடுத்துக்காட்டி உலகில் வாழும் காலத்தை நல்லபடியாக அமைப் பதற்கே காலத்திற்குக்காலம் சக்திமிக்க, ஆற்றல் மிக்க, அறிவாளிகளையும் உலகிற்கு அனுப்பி வழி நடாத்தி வருகிறது அந்த சக்தி.

உலகின் இயற்கை அனைத்தையும் பார்க்கும் போது என்ன அழகு, என்ன அற்புதம்!

ஐம் பெரும் பூதங்களானநிலம், நீர்,காற்று, ஆகாயம், நெருப்பு,

இவை அனைத்தையும் சிந்தித்துப்பார்த்தால் இறைவனின் கருணை, அவனது கொடை நன்கு புலப்படுகிறது. இவை எல்லாம் இயற்கை என்று எண்ணிக்கொண்டு சிந்தனையற்று இருந்து விட்டால். எல்லாம் வெறும் சடப்பொருளாகவே தெரியும்.

இத்தகைய இயற்கையின் நடுவில் ஆறு அறிவு கொண்ட மனிதர்களையும், ஆறறிவற்ற மிருகங்கள்,பறவைகள் புல் பூண்டுகள் முதலான ஜீவ கோடிகளையும் படைத்துள்ளது அந்த சக்தி. எல்லாம் இவ்வுலகம் இயங்கு வதற்காகவே தரப்பபட்டுள்ளன. இத்தோற் றத்திற் கெல்லாம் மறைவும் உண்டு.

சிறந்த பண்புகளுடன் வாழ்கின்ற மனிதன் விஞ்ஞானம் மெஞ்ஞானம் அஞ்ஞானம் எல்லாவற்றையும் உணர்கின்றான்.-


விஞ்ஞானத்தின் மேம்பாட்டால் வாழ்க்கை முறை அதாவது ஊன், உடை, நடை பாவனைப் பொருட்கள் அனைத்துமே மாறுதல் அடைந்து கொண்டுபோகின்றன. விவசாயம் முதல் விண்வெளிவரையும் அதற்கப்பாலும், புவியின்: பாதாளம் வரையும் அதற்கப்பாலும் விஞ்ஞானம் வளர்ந்துகொண்டே பல சாதனை கள் நடைபெற்றுக்கொண்டே போகிறது. விஞ்ஞானத்தால் அளவுகடந்த ஆக்கமும், அளவுகடந்த அழிவும் ஏற்பட்டுக்கொண்டே போகிறது.

அன்று மரக் கட்டையால் நெருப்பை உண்டாக்கி சூடுகாய்ந்த மனிதன், அடுப் பெரித்த மனிதன், இன்று மின்சாரத்தினால் எல்லாவற்றையும் செய்து சுலபமாக வாழ் கின்றான்.

ஓலைச்சுவடுகளில் எழுத்தாணியாலும் கற் களில் உளிகளாலும் தமது சிந்தனை களைப் பொறித்த மனிதன் இன்று கணனிப் பொறிக்குள் புகுந்து தான் நினைத்த வேலை களை எல்லாம் மிகச்சிறப்பாக முடித்து வெளி யேறுகின்றான். தூரத்தில் உள்ள ஒரு வருடன் தொடர்பு கொள்ள வேண்டுமானால் அன்று கால் நடையாக நடந்தும், மிருகங்களில் சவாரி செய்தும், குதிரை வண்டிகளில் சென்றும் தன் தேவைகளைப் பூர்த்திசெய்தான்.

இன்றோ துவிச்சக்கரவண்டி மோட்டார் வண்டி புகைவண்டி ஆகாயவிமானம், இவற்றின் துணையுடன் வசதியாக வாழ்கின்றனர்.








பெரும் கல்லை அன்று பொறிமுறையுத்தியில் அதி உயரத்துக்கு எடுத்துச்சென்ற விவேகம்.

# ஆயிரம்,ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய உயிரின் விவேகம்

காய்,கனி,கிழங்குகளை பெரும்பாலும் பச்சை யாகவே உண்டுதள்ளிய ஆதிமனிதன். இன்று வேகவைத்தும், பொரித்தும் இனிமையாகச் சுவைத்து வருகின்றான். அன்று இலைகளையும் மரவுரிகளையும், மிருகங்களின் தோலையும் உடையாக உடுத்த மனிதன் இன்று சொல்ல முடியாத அளவு இந்த ஆடைவிடையத்தில் போய்விட்டான்.

அன்று வில்லு அம்புடன் திரிந்து வேட்டை யாடிய மனிதன் இன்று துப்பாக்கி, பீரங்கி அணு ஆயுதம் என்று தேவைக்குமேலால் கண்டு பிடித்து தான் வாழ்வதுடன் தன் இனத்தையும் கொன்று குவிக்கின்றான். அயல் நாடுகளை ஆக்கிரமிக்கின்றான்.

இவையனைத்தும் மனிதனை உயிர் வாழ் விக்கும் சக்தியினாலேயே ஏற்பட்ட மாற்றமும் வளர்ச்சியுமாகும். இது உயிரின் மரதன் ஓட்டம். ஆதிகால மக்கள் மன ஒருமைப்பாடு,தியானம் மன உறுதியாலும் ஆத்மசக்தியாலும் கணக் கிட்டு கிரகங்களின் தெழிற்பாடு, அவற்றின் அசைவுகளினால் ஏற்படும் மாற்றங ்களைக் கண்டறிந்தனர்.

விஞ்ஞானம் வளர்வதற்குமுன் அனேககோடி ஆண்டுகளுக்கு முன் மெஞ்ஞானத்தால் எல்லாவற்றையும் சாதித்தனர்.

இவை எல்லாம் இறைவனின் சக்தியே! இந்த சக்தி இல்லாவிட்டால் அணுவும் அசையாது. சிந்தியுங்கள்! இவர் யார் என்பதை அறியுங்கள்.



## அன்றே எந்தன் ஆவியும் உடலும்!

அன்னையின் வாயில்
தினம் மலரும் பாடல் இது


மாணிக்கவாசகர்

**அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்**
**குன்றே அனையாய் எனையாட் கொண்ட போதே கொண்டிலையோ**
**இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே**
**நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே.**

**திருவாசகம்: குழைத்த பத்து**

எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையம் உடைய குன்றினை ஒத்த எம்பெருமானே! என்னை நீ ஆட்கொண்டருளிய அன்றே எனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஏற்றுக்கொண்டுள்ளாய் அன்றோ? அதனால் எனக்கு இனி என்ன இடையூறு வரப்போகின்றது? நீ நன்மை செய்தால் என்ன தீமை செய்தால் என்ன நான் அவற்றுக்குப் பொறுப்பாகமாட்டேன்.

(இறைவனே பொறுப்பாவான் என்பது குறிப்பு.)



# இந்துக்களின் சொர்க்க பூமி

## பாலி (இந்தோனேசியா) இந்துக்களின் சொர்க பூமி

உலகின் மிகப்பெரிய இஸ்லாம் நாடான இந்தோனேசியாவில் உள்ள ஒரு தீவு தான் பாலி (டியுடுஜ). இங்கே 93 சதவீத மக்கள் ஹிந்துக்கள். 42 லட்சம் ஹிந்துக்களின் தாயகமாக பாலி விளங்குகிறது. ஒரு காலத்தில் ஹிந்து ராஜ்யமாக இருந்த இந்தோனேசியாவில், முஸ்லிம்களின் படையெடுப் பிற்கு பிறகு பெரும்பான்மை மக்கள் முஸ்லிம்களாக மாற்றப்பட்டனர். இஸ்லாமி யர்கள் மஜாபஹிட் (Majapahit ) என்ற கடைசி ஹிந்து மன்னரை வீழ்த்திய பிறகு ஹிந்து மதத்தை விட்டு மாறாமல் இருந்த மக்கள் பாலிக்கு குடிபெயர்ந்தனர்.

## பாலியை பற்றிய சுவாரசியமான தகவல்கள்.

1. இங்கே ஒவொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் ஒரு நாள் மௌன விரதம் கடைபிடிக்க படுகிறது. Nyepi day என்று சொல்கிறார்கள். 2013ல் மார்ச் 12ம் தேதி இந்த மௌன தினம் வந்தது. ஹிந்துகளின் பண்டிகை போன்ற அந்த நாளில் இந்தோனேசியா முழுவதும் விடுமுறை அளிக்கபடுகிறது.

காலை 6 மணி முதல், மாலை 6 மணி வரை எந்த போக்குவரத்தும் இருக்காது. பன்னாட்டு விமான நிலையமான Denpasar (bali) விமான நிலையம் கூட மூடப்பட்டு இருக்கும். யாரும் பேசிக்கொள்ள மாட்டார்கள். வீட்டில் இருந்தபடியே தியானம் செய்வார்கள்.

2. பாலியில் உள்ள ஹிந்து கலாச்சாரம் இந்திய ரிஷிகளிடமிருந்து வந்தது தான். பாலி பள்ளிகளில் இன்றும் கூட ரிஷிகளை பற்றிய பாடங்கள் இருக்கின்றன. புராணங்களில் வரும் மார்கண்டேய, அகஸ்திய, பரத்வாஜ ரிஷிகளை பற்றி இந்தியாவில் யாருக்கும் தெரியாத நிலையில், இந்த ரிஷிகளை பற்றி பாலி குழந்தைகள் கூட தெரிந்து வைத்து இருக்கிறார்கள்.

3. பாலியில் ஆணுக்கும், பெண்ணுக்கும் தேசிய உடை “வேஷ்டி“ தான். எந்த ஒரு பாலி கோவிலுக்கும் வேஷ்டி அணியாமல் ஆணோ, பெண்ணோ உள்ளே செல்ல முடியாது. இந்தியாவில் கூட சில கோவில்களில்தான் பாரம்பரிய உடை கட்டாயமாக உள்ளது (குரு வாயூர் போன்ற). ஆனால் பாலியில் அனைத்து கோவில்களிலும் நமது உடை அணிந்து தான் செல்ல வேண்டும்.

4. பாலியின் சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பு ரிஷிகள் உருவாகிய tri-hita-karana என்ற கோட்பாட்டின் படி தான் அமைந்துள்ளது. அதைதான் அவர்கள் தங்கள் வாரிசுகளுக்கும் சொல்லிக்கொடுக்கிறார்கள். Parahyangan - Pawongan - Palemahan என்று பொருள்படும். tri-hita-karana என்பது சமஸ்கிருதம்.

5. Trikala Sandhya என்பது சூரிய நமஸ்காரம். அனைத்து பாலி பள்ளிகளிலும் கட்டயாமாக மூன்று வேலை சூரிய நமஸ்காரம் செய்கிறார்கள். அதே போல மூன்று வேலையும் காயத்ரி மந்திரத்தை அவர்கள் பள்ளியில் சொல்லவேண்டும். பொதுவாக பாலி வானொலியில் மூன்று வேளை சூரிய நமஸ் காரம் செய்ய வேண்டிய நேரத்தில் அதை ஒலிபரப்புவார்கள்.

**6. பாலி கோவில் பூசாரிகளின் சம்பளத்தை இந்தோனேசியா அரசாங்கமே கொடுக்கிறது. முஸ்லிம் மத நாடான இந்தோனேசியாவில் அனைத்து மத கோவில் பூசாரிகளின் சம்பளத்தை அரசே கொடுக்கிறது.**

7. இந்தோனேசிய நாட்டின் மூதாதையர்கள் அனைவரும் ஹிந்துக்களே, அதனால் அவர்களின் பண்பாடுகளில் இந்திய கலாச்சாரமே அதிகம் கலந்துள்ளது.

8. உலகில் அரிசி விளைவிக்கும் நாடுகளில் இந்தோனேசியா முக்கிய இடம் வகிக்கிறது, பாலி தீவு முழுவதும் அரிசி வயல்கள் தான் இருக்கின்றது. பாலி மக்கள் விளைந்த அரிசியை முதலில் ஸ்ரீ தேவி, பூதேவி (Shri Devi and Bhu Devi ) ஆகிய தெய்வங்களுக்கு தான் படைக்கிறார்கள். அனைத்து வயல் களிலும் இந்த இரண்டு தெய்வங்களும் கோவில் இருக்கும், விவசாயிகள் இந்த இரு தெய்வங்களை வணங்கிய பிறகு தான் விவசாய தொழிலுக்கு செல்வார்கள். 9ஆவது நூற்றாண்டிலேயே விவசாய மற்றும் நீர்பாசன விதிமுறைகளை ஹிந்து பெரியோர்கள் கற்றுகொடுத்து இருக்கிறார்கள். அதற்க்கு Subak System என்று பெயர். இங்கே நீர் பாசனம் முழுவதும் கோவில் பூசாரிகளின் கட்டுபாட்டில் தான் இருக்கும். உலக வங்கியே Subak System பின் பற்றுமாறு மற்ற நாட்டினருக்கு அறிவுரை வழங்கி உள்ளது குறிப்பிட தக்கது. இந்தியர்கள் கொண்டு வந்த இந்த விஞ்ஞானம் இன்று இந்தியாவில் இல்லை.



9. பாலி ஹிந்துக்கள் பூஜை செய்யும் பொழுது அச்சடிக்கப்பட்ட புத்தகங்களை வாசிப்பது இல்லை. இன்றும் கூட அவர்கள் கையால் எழுதப்பட்ட ஓலை சுவடியையே (Lontar) பயன்படுத்துகிறார்கள். ராமாணயம் அனைவருக்கும் தெரிந்து இருக்கும். ராமாணய ஓலைசுவடியை நல்ல நாட்களில் எடுத்து வரும் திருவிழா நடைபெறும்.



10. அனைத்து திருவிழாகளிலும் பாலி நடனம் ஆடுவார்கள், அதில் பெரும்பாலும் இராமாயண இதிகாசங்களை கதைகளாக சொல்வார்கள். ஹிந்துக்களின் சொர்க்க பூமி பாலி என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.



# இந்து சமயத்தில் பெண் தெய்வ வழிபாடு

த. சிவபாலு



பெண் தெய்வ வழிபாடு எப்போது ஆரம்பித்தது எங்கே தொடங்கியது என்னும் கேள்விக்கு விடை காணமுடியாத நிலை அராய்வாளர்களிடையே பல கருத்துப் பேதங்களை எடுத்துக் காட்டுகின்றன.

ஆபிரிக்காவில் இது முதலில் தொடங்கி யிருத்தல் வேண்டும் என ஒரு சாராரும், இந்தியாவில் தொடங்கியுள்ளது என இன்னொரு சாராரும் இல்லை மத்திய ஆசியாவில் தான் தொடங்கியுள்ளது என இன்னொரு சாராருமாக பல்வேறு கருத்துக் களைத் தந்துகொண்டு இருக்கின்றனர்.

பெண்கள் ஆதியில் முக்கியமானவர்களாக, சமுதாயத்தின் ஆதாரமாகக்கொள்ளப்பட்டு வந்துள்ளனர் என்பதனை இந்தப் பெண் தெய்வ வழிபாட்டு முறைகள் காட்டுகின்றன. ஆனால் அவை படிப்படியாக மாறி ஆணா திக்க முறை மேலோங்கியுள்ளமை சமு தாயத்தின் மாற்றமாக உடல் வலிமை யின் அடிப்படையில் அது மாற்றம் கண்டுள்ளது என்னும் கருத்தும் முன்வைக்கப் படுகின்றது.

இறைவணக்கம் பொதுவாக இயற்கையை வணங்கும் முறையாகவே ஆதிகாலத்தில் நிலவியிருக்கின்றது என்பது பெரும் பான்மையான ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. இன்றும் சூரியன், சந்திரன் போன்ற கிரகங்களையும், காற்று, மழை, நீர் போன்றவற்றையும் வணங்கும் முறையும் விலங்குகளை வணங்கும் முறையும், ஆவி, பேய், தேவதை போன்றவற்றை வணங்கும் முறைகளும் காணப்படுகின்றன.

### வேதகால இலக்கியத்தில் பெண் தெய்வங்கள்:

இந்து சமயம் எனப் பொதுவாக இந்தியாவில் உள்ள பல்வேறு சமயப் பிரிவுகளையும் உள்ளடக்கிக் குறிப்பிடப்படுகின்றது. இது சைவம், வை'ணவம், சாக்த்தம், சம்மாரம் போன்ற பல பிரிவுகளை உள்ளடக்கியதாகக் கொள்ளப்படு கின்றது. இவற்றுள் சிவனை முதற்கடவுளாகக் கொண்டுள்ள சைவம் பார்வதியை சிவனின் சக்தியாக வழிபடும் முறை தொன்றுதொட்டு நிலவிவருகின்றது. பார்வதியின் புதல்வர்களாக பிள்ளையார் அல்லது கணபதி, கந்தன் அல்லது முருகன் உள்ளனர். உலகில் தோன்றிய சமயங்களில் இந்துமதம் எப்போது தோன்றியது, யாரால்தோற்றுவிக்கப்பட்டது என்பன தெரியாத ஒரு சமயமாக உள்ளது.

இந்திய சமயம்சார்ந்த மிகப்பழமை வாய்ந்த ஆவணங்களில் வேதம், இருக்கு, யசுர், அதவர்வணம் ஆகிய நான்மறைகள் அல்லது நான்கு வேதங்கள் எனக் கொள்ளப்படுகின்றன. வேதநூலின்படி ஆண்களே மேலானவர்களாக எல்லாவற்றிலும் முன்நிற்பவர்களாகவும் தலைவர் களாகவும் கொள்ளப்படுகின்றது. பெண்கள் இரண்டாமிடத்திலேயே வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இந்துமத கோட்பாட்டின்படி சிவனையும் உமையையும் அர்த்தநாரீஸ்வரர் என சமத்துவமான நிலையில் வைத்துள்ளது.

சிவமின்றிச் சக்தியில்லை, சக்தியின்றி சிவ மில்லை என்ற எண்ணப்பாங்கு இந்துக் களிடையே மிக இறுக்கமானதாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

அத்வைதுவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'நிர்க்குண' பேதமற்ற நிலையினை எடுத்துக் காட்டு கின்றது. வேதத்தில் பெண் தெய்வங்களாக 'சரஸ்வதி, உஷா, ஆரியம்மா என்னும் தெய் வங்களின் வழிபாட்டினை ரிக்வேதம் எடுத்துக் காட்டுகின்றது. யசுர்வேதத்தில் ஸ்ரீ காயத்திரி வழிபாடும், மகாலஷிமி, துர்க்கை வழிபாடும், உபநஷத்தில் உமை, கேமாவதி எனவும் புராணங் களில் லலிதாம்பிகை எனவும் ஆகமங்களில் திரிபுர சுந்தரி, இராஜராசேஸ்வரி, மகாகாளி, எனப்பல வடிவங்களிலும் பெயர்களிலும் வழங்கப் படுகின்றன. இதில் ஆதித்தி, பிருத்திவி என்னும் பெயர்களில் சக்தி வழிபாடு முக்கியம் பெற்று வந்துள்ளது.

**ஆதித்தி:**

வேதகாலத்தில் தாய்த்தெய்வமாக கொள்ளப்படுவதற்கான மிகப்பெரும் வாய்ப்பு ஆதித்திக்கே கிடைத்துள்ளது. தேவ மாதா என அடிக்கடி குறிப்பிடப்பட்டுளள்ார். ஆவர் கடவுளரின் தாயாக மட்டுமன்றி அகிலத்தின் தாயாகவும் விபரிக்கப் பட்டுள்ளார். ஆதித்தி எப்போது தோன்றினார் என்பதனைக் குறிப்பாகச் சொல்லமுடியாது, ஆனால் இந்திய சமய வரலாற்றில் இடமபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பிருத்திவி:**

தாய்வழி வழிபாடு தொடங்கிய காலத்திலிருந்து பெண்தெய்வங்களில் முக்கியமானது பிருத்திவி இது பூமித் தெய்வமாகக் கொள்ளப்படுகின்றது, "மா பெரும் தாய்' எனக் கொள்ளப் படுகின்றது. ஸ்ரீ என்னும் நாமத்தினாலும் பூமாதேவி அழைக்கப்படுகின்றாள்.

**தேவி வழிபாடு**

தேவி வழிபாடு இருக்கு வேதகாலத்தி லிருந்தே இருந்துவந்துள்ளது என்பதற்கு ரிக்வேதத்தில் காணப்படும் தேவி வழி பாடுகள்பற்றி அறியக்கிடக்கின்றன. எனினும் 'தேவிமகத்மயம்' கி.பி எழுதப்பட்ட இதிகா சத்தில் விபரமாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்திய வரலாற்றை ஆய்தவர்கள் தேவிவழிபாடு கி.மு.1600-19900 வரை இந்து சமவெளி நாகரீகக் கலாத்தில் பெண்தெய்வ வழிபாட்டுமறை இருந்ததற்கான அடை யாளச்சான்றுகள் கிடைத்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். அவை கழிமண்ணினால் ஆக்கப்பட்ட பல வடிவங்களைக் கொண்ட பெண்தெய்வங்களின் உருங்கள் பொறிக் கப்பட்ட தகடுகள், சிலைகள் கண்டெடுக்கப பட்டுள்ளன. எனவே வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடக்கமே இந்தியாவில் தேவி வழிபாடு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. கி.மு 1300 வரையில் தங்களை ஆரியர்கள் எனக்கூறிக்கொண்ட நோமண்டி மக்கள் கூட்த்தினர் வட இந்தியாவில் ஆதிக்கத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர். இவர்களின் தூய்மையான இலக்கியமாக வேதம் கொள்ளப்பட்டுள்ளது. சமஸ்கிருத மொழி யில் எழுந்த இந்த இலக்கியப் படையல்கள் அண் முதன்மையை வலுப் படுத்தியுள்ளமை அறியத்தக்கது. ஆனால் முன்னைய காலங்களில் பெண்தெய்வ வழிபாடு முன்னுரிமை வகித்துள்ளமையை அகழ் வாய்வுகள் புலப்படுத்துகின்றன. கிராமியப் விவசாயப் பிரதேசங்களில் பெண்தெய்வ வழிபாடே பின்பற்றப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலை ஆரியர்களின் ஆதிக்கப்பரம்பலின் பின்னர் மறைந்து தொழிந் தோ அன்றி மாற்றம் கண்டோ வந்துள்ளது. ஆண்தெய்வவழிபாடும், அண்ணின் மேலாதிக் கமும் வலுவடைந்து வந்துள்ளமையினை வேத இலக்கியம் காட்டுகின்றது.

இங்கு இரண்டு ஆண்தெய்வங்கள் முக்கியம் பெறுகின்றன. 1.சிவன் 2. விஷ்ணு, இதனை ஒட்டி தேவிவழிபாடு துணைத் தெய்வமாக சக்தியாகக் கொள்ளப்படுகின்றது. பெண்தெய்வங்கள் கொடையாளிகளாக மாற்றம் பெற்றுள்ளன. சிவ வழிபாட்டில் அர்த்தநாரீஸ்வரன் வடிவம் சமத்துவத்தை ஆணுக்கும் பெண்ணுக்கும் கொடுப்பதாக அமைந்தாலும் முதன்மை சிவனுக்கே கொடுக்கப்படுகின்றது.

பூமாதேவி, பார்வதி, உமாதேவி, சக்தி, சரஸ்வதி, இலகஷ்மி, துர்க்கை, காளி, யாகினி, தாட்சாயினி, யாட்சாயினி, காயத்திரி, கெளரி, அம்பிகை, யமுனா, கங்கை, நர்மதை, மோகினி, யோகினி, தாரணி, அஸ்வினி எனப் பல்வேறு பெயர்களில் காலத்திற்குக் காலம் பெயர்பெற்று அழைக் கப்பட்டுப் போற்றப்பட்டுள்ளாள். இந்துமதத்தில் இவை எல்லாவற்றையும் உள்வாங்கிக்கொண்டு அனைத்தையும் சக்தியின் அவதாரங்களாகக் கொள்ளப்படுகின்றது. சயப்பிரிவுகளில் காலத்திற் குக்காலம் வெவ்வேறு தன்மைகளில் இடத்திற்கு இடம்வேறுபாடுடையதாக அமைந்துள்ளது.

கல்கத்தாவில் துர்க்கை வழிபாடும் அதன் விழாக் கொண்டாட்டங்களும் மிகவும் சிறப்பானதாக அமைகின்றன. குஜராத் மாநிலத்தில் சரஸ்வதி பூசைக் கொண்டாட்டங்கள் சிறப்பாக அமை கின்றன. தென்னகத்திலும் வாணிவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

செல்வத்தைத் தருபவன் இலக்குமியாகவும், கல்வி, கலைகளுக்கு சரஸ்வதியும், வீரத்திற்க துர்க்கையும் என வெவ்வேறான வடிவங்களில் கொண்டாடப்படுகின்றது. விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வணங்கும் வைணவர்கள் இலக் குமியைத் தங்கள் முன்னணிச் சக்தியாகக் கொள்கின்றனர். பிரம்மனை முழுமுதற் கடவுளா கக் கொள்ளும் மகாவீரரால் ஆரம்பிக்கப் பட்ட ஜெயனிசத்தினர் சரஸ்வதியை முதற் சக்தியாகக் கொள்கின்றனர், சக்தி வழிபாட்டை முதன்மை யாகக் கொள்பவர்கள் துர்க்கை வழிபாட்டில் ஈடுபடுகின்றனர்.

சேளமாரம் எனப்படும் மதவழிபாட்டில் சிவன், விஷ்ணு, பிரம்மா என்பதனைவிடுத்து எல்லாத் தெய்வங்களையும் வழிபடும் தன்மையைக் கொண்டுள்ளனர். சைவசம யத்தினர் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்கின்றனர் எனினும் சைவசமயத்தில் பலபிரிவுகள் இருப்பதும் கண்கூடு. சைவம், சைவசித்தாந்தம், பசுபதி, காஸ்மீரிய சைவம், வீரசைவம், சித்த சித்தாந்தம், சைவ அத்வைதம் என்பனவற்றை அவ தானிக்க முடிகின்றது.

காஸ்மீரில் பின்பற்றப்படும் சைவ வழிபாட்டுமுறை இந்து நாகரீக காலத்தி லிருந்து பின்பற்றப்பட்டு வருவதாகக் காணப்படுகின்றது. வேதகாலத்திற்கு முன்னரே ஆரம்பித்த அனாதியானதாகக் காணப்படுகின்றது. வேதம் எழுதப்படக் காலாக அமைந்தது அனாதியான சைவம் எனக் கொள்ளக்கூடிய சான்றுகள் அக வாய்வுகளின்மூலம் கிடைத்துள்ளன.

ஆரியர்களின் வருகைக்கு முன்னரே தேவி வழிபாடு இருந்துள்ளது என்பதனை நோக்கின். இங்கிருந்த திராவிட இனத்தினர் தான் தேவிவழிபாட்டின் முன்னோடிகள் எனக்கொள்ளலாம். வேதகாலத்திற்குப் பின்னர் புராணங்கள், ஜாதகக்கதைகள், கர்ணபரம்பரைக் கதைகள், கட்டுக்கதைகள் என்பன வாழ்க்கைக்கு ஒவ்வாதனவாக அமைந்துள்ளபோதும் அவற்றை கடவு ளென்னும் நாமம் சூட்டப் பட்டு அனை வராலும் ஏற்றுக்கொள்ளளும் வண்ணம் வைக்கப்படுகின்றன.

இராம சீதா வரலாற்றை நோக்கும்போது சீதை இராவணனால் கவர்ந்துசெல்லப்பட்டு இலங்கையில் சிறைவைக்கப்பட்டவன். முாற்றானால் கவர்ந்து செல்லப்பட்டவன். இராம- இராவண யுத்தம் முடிவடைந்ததும் அயோத்திக்குத் திரும்பிய இராமன் சீதைமீது ஐயறவு கொண்டு அவளைக் காட்டிற்கு தனது தம்பி இலக்குவணனோடு அனுப்பிவிடுகின்றான். அவளை அவன் காட்டில் விட்டுவிட்டு வருகின்றான் என வால்மீகி இராமாயணம் குறிப்பிடுகின்றது. அங்கு வால்மீகியைக் கண்டு அவர்களின் குடிசையில் தங்கியிருந்து லவ, குச என்னும் இரண்டு பிள்ளைகளைச் சீதை பெற்றெடுத் ததாகவும், அந்தப்பிள்ளைகள் வால்மீகியின் மடியில் ஏறி விளையாடும் காட்சி ஓவியமாக வரையப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்த இராம சீதையை கடவுளராக வை'ணவர்கள் வணங்கி வழிபட்டுவருககின்றனர்.

மகாபாரததத்திலும் இவ்விதமான கதைகள் காணப்படுகின்றன. இவ்விதமான கதைகள் தெய்வாம்சத்தைக்குறைப்பதோடு பல கேள்வி களை எழுப்பவும் காரணமாகின்றது.

சக்தவழிபாடு இந்திய நாட்டின் தெய்வ வழிபாட்டு முறைகளில் தேவி வழிபாடு அல்லது சக்தி வழியாடு பழம்பெரும் நாகரீகத்தோடு தொடர் புடையதாகக் கொள்ளக் கிடக்கின்றது.

சிந்துவெளி நாகரிக காலத்திலேயே தேவி வழிபாடு இடம்பெற்றுள்ளமைக்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

வேத காலத்திற்கு முன்னர் தேவி வழிபாடு இருந்துள்ளமைக் கான பல்வேறு வடிவங்கில மைந்து களிமண்ணாலான பெண் தெய்வ உருவங்கள் சிந்துவெளி நாகரிக காலத்திற் குரியன என அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தி யுள்ளன. தம்மை ஆரியர் என அழைத்துக் கொள்ளும் ஒரு நாடோடிக் கூட்டத்தினர் இந்திய உப கண்டத்தினுள் நுழைந்து வட இந்தியாவின் ஆதிக்கத்தைக் கையில் எடுத்தக்கொண்டனர்.

அடுத்து வரும் சிவத்தமிழில் மேலும் விரிவாகப்பார்ப்போம்.


Bald in Bonnbeuel நகரத்தில்

**எமது புதிய கிளை ஸ்தாபனம் !**

**T.T.S.Brothers GmbH&Co.KG**

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846
Asien Supermarkt

ஆயிரக்கனக்கான வாடிக்கையார்களின்
வேண்டுதலுக்கு இணங்க
எமது கிளை ஸ்தாபனம்
53227 Bald in Bonnbeuel நகரத்தில்
Johannesstr.35 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது
என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

உங்கள் வீட்டு தேவைக்கான
அனைத்து மளிகை பொருட்கள்-
ஆடை அணிகளன்கள் மற்றும்
உங்கள் உறவுகளுக்கு பணம்
அனுப்புவது முதல் அனைத்து
தேவைகளுக்கு
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

# எந்த நிலையில் இறைவனைக் காணலாம்?

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தரும் விளக்கம்



தாங்க முடியாத தாபம் கொண்டு இறைவனையே நினைந்து நினைந்து, உருகி உருகி, இரு கண்களில் நீர் சொரிய மிக மிக ஏங்கி அழுதால் அவனைக் காண முடியும். மனைவி மக்களுக்காக ஆசை வயப்பட்டு மாந்தர் குடங்குடமாக கண்ணீர் சிந்துகிறார்கள். மனிதர்கள் மண்ணினால், மங்கையரால், பொருளால் மனம் மயங்கி மிக வாடி அழுது கண்ணீர்க் கடலில் மூழ்குகிறார்கள். அந்தோ! இறைவனுக்காக யார் அழுகிறார்கள்? ஊனும் உயிரும் உருக அவனுக்காக உண்மையாக அழ வேண்டும்.

தாய் குழந்தையை நேசிப்பது போல், மனைவி கணவனை நேசிப்பது போல, உலகப்பற்றுடையவன் உலக இன்பங்களை நேசிப்பது போல ஒருவன் கடவுளை உள்ளன் போடு நேசிக்க வேண்டும். இந்த மூன்று நேசங்களும் ஒன்று சேர்ந்தால் எவ்வளவு வலிமை கொண்ட அன்பைக்காட்ட முடியுமோ அந்த அளவு அன்பை இறைவனிடம் காட்டினால் அவன் நிச்சயமாக இறைவனைக் காண்பான். எனவே இறைவனுக்காக எப்பொழுதும் ஏங்குகின்ற உள்ளத்தை ஒருவன் பெறுவது மிக மிக அவசியம்.

தாயைக் காண விரும்பும் பூனைக்குட்டி 'மியாவ் மியாவ்' என்று கத்தி அழுகிறது. தாய்ப்பூனை குட்டியை எங்கு கொண்டு போய் வைக்கிறதோ அந்த இடத்திலேயே குட்டி திருப்தியோடு இருக்கின்றது. சில சமயம் சமையல் அறையிலும் வேறு சமயத்தில் குப்பை மேட்டிலும், இன்னொரு சமயம் பஞ்சு மெத்தையின் மீதும் குட்டியை தாய்ப்பூனை வைக்கிறது. பூனைக்குட்டிக்கு ஏதாவது துன்பம் வருமானால் அது 'மியாவ் மியாவ்' என்று கத்துகிறது. இப்படிக் கத்துவதை தவிர வேறு எதுவும் தெரியாது. இந்தக் கதறலைக் கேட்ட அக்கணமே தாய்ப்பூனை எங்கிருந்தாலும் குட்டியிடம் ஓடோடி வந்து விடுகிறது. அதுபோல் நாமும் இறைவனுக்காக ஏங்கி அவனுக்காக அழுதால் அவனும் ஓடோடி வருவான். **ஆக்கம் : சி. சாம்பவி - தரம் : 10**

**இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை**

# துன்பம் தரும் சொல்





அது ஒரு அகம்பாவம் கொண்ட ஒட்டகம். எப்பொழுது பார்த்தாலும் யாரையாவது குறை கூறிக் கொண்டே இருக்கும். பசு மாட்டிடம் போய், "உன் விலா எலும்பெல்லாம் எப்படி அசிங்கமாகத் துருத்திக் கொண்டிருக்கிறது பார். உடம்பெல்லாம் வேறு திட்டுத்திட்டாகத் தெரிகிறது. அசிங்கம்!" என்றது. எருமையிடம் போய், "நீயும் உன் நிறமும்! சே! எவ்வளவு அசிங்கம்!" என்றது. ஒரு மிருகத்தைக் கூட விட்டுவைக்கவில்லை. எல்லா மிருகங்களும் ஒட்டகத்தின் விமர்சனத்தைக் கேட்டு வருத்தப்பட்டன.

அந்தச் சமயம் ஒரு நரி வந்தது. வந்ததும் வராததுமாக "யாரது அங்கே! ஒட்டடைக்குச்சி போல கால்களும், அசிங்கமான முதுகும், காவியேறிய கோரப் பற்களும் வைத்திருப்பது. இப்படி ஒரு அசிங்கமான மிருகத்தை நான் பார்த்ததே இல்லையே!" என்று நரி கூறியது. ஒட்டகமோ வெட்கித் தலை குனிந்தது.

ஆக்கம் : **கி. யாதேஷ**

**தரம் : 3 இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை-கொழும்பு**

**அம்மாவும் நீயே! 10 ம் பக்கத்தொடர்ச்சி**

தாயின் அரவணைப்பு தனக்குத் தேவைப்படும் வரை அவளது அன்பில் கட்டுண்டு கிடக்கும் பிள்ளை வளர்ந்து பெரியவனாகி தனக்கென்று ஒரு வாழ்வைத் தேடிக்கொள்ளும்போது தாயைப் பிரிவதென்பதும் தவிர்க்க முடியாத தாகிறது.
ஒரு பெண் ஒருத்திக்கு மகளாக சிலருக்கு சகோதரியாக சிலருக்குத் தோழியாக ஒருவனுக்கு மனைவியாக வாழ்கின்ற நிலை வரை அவள் ஒருபெண்.
ஆனால்: ஒரு உயிரைக் கருவில் சுமந்து அதைப் பெற்றெடுத்து ஒரு தாயாக அவள் உயர்வடையும்போதோ அவள் தெய்வத்துக்குச் சமானமாகிவிடுகிறாள்.
சக்தியின் வடிவமாக அவள் உருமாற்றம் கொண்டு விடுகிறாள்.

தாயைத் தெய்வமெனப் போற்றும் பண்பை மனிதன் கற்றுக்கொண்டது அவளது படைப் பாற்றலால்தான்.
எனக்கு என் அன்னை தெய்வம் என்று நான் உணர்வதுபோல் என் அன்னைக்கு அவளது அன்னை தெய்வம். அந்த அன்னைக்கு அவளது அன்னை தெய்வம் இவ்வாறே எல்லா மனிதர்க்கும் மூலமாக நிற்கின்ற ஒர அன்னை எல்லோர்க்கும் தெய்வம். அவளே ஆதி பராசக்தி.
அவள் தெய்வத்தின் தெய்வம்.
நம்மைப் பெற்றுவளர்த்துப் பெருவாழ்வளித்து மறைந்துவிடும் தாயைப்போல் அவளும் இந்த உலகத்தை உருவாக்கிவிட்டு மறைந்தே நிற்கிறாள்.
நமது இயக்கம் என்பதும் நமது வாழ்வு என்பதும் அவள் நமக்களித்த வரம்.
நமக்கு அவள் தந்த இந்த வாழ்:வில் இடையறாத அன்பு செலுத்தி அவளைச் சென்றடைவதே நமது வாழ்வின் பயன்.

**யானே பொய் என் நெஞ்சும் பொய் ஏன் அன்பும் பொய்யே**
**ஆனால் வினயேன் அழுதால் உன்னைப் பெறலாமே**
**தேனே அமுதே கரும்பின்தெளிவே தித்திக்கும்**
**மானே அருள்வாய் அடியேன் உனைவந்துறுமாறே!**

மாணிக்கவாசகர்)

## நீ எதை நினைக்கின்றாயோ....



நீ எதை நினைக்கின்றாயோ அதுவாக ஆகின்றாய் உன்னை வலிமை படைத் தவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்.

உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே.

நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால்
பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகி விடும்.
பலமே வாழ்வு பலவீனமே மரணம்.

கீழ்ப்படியக் கற்றுக் கொள் கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்தடையும்.

உற்சாகமாக இருக்கத் தொடங்குவதுதான் வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தொடங்கு வதற்கான முதல் அறிகுறி.

அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக்
கொண்டு வந்தே தீரும்.

உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

தனியாக இருக்கும் பொழுது நீங்கள் என்ன சிந்திக்கின்றீர்களோ அதுதான் உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைக்கும்.

உலகில் உள்ள தீமைகளைப் பற்றியே நாம் வருந்துகிறோம். நம் உள்ளத்தில் எழும் நச்சுஎண்ணங்களைப் பற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை. உள்ளத்தை ஒழுங்கு படுத்தினால் இந்த உலகமே ஒழுங்காகிவிடும்.

**சுவாமி விவேகானந்தர்**




### மூன்று கதவுகள்

தானம், தவம், யாகம் போன்றவை தெய்வீக குணங்களாகும். காமம், கோபம், பொறாமை, தற்பெருமை, அகங்காரம் ஆகியவை அசுர இயல்புகளாகும். அசுர இயல்புகளைக் கொண்டவர்கள் அடையும் நரகத்திற்கு மூன்று கதவுகள் உள்ளன. அவை காமம், கோபம், பேராசை. இவை மூன்றும் ஆத்மாவின் அழிவுப் பாதைக்கு வழிவகுப்பவை. அறிவு கொண்ட மனிதன் இதை உணர்ந்து அசுர குணங்களை அறவே நீக்கிட வேண்டும். இதில் இருந்து தப்பியவன் படிப்படியாக தன்னை உணர்ந்து சாத்தியமான செயல்களைச் செய்வான். இதனால் அவனது ஆத்மா நிலைபெற்று இறுதியில் பரம்பொருளான இறைவனை அடையும்.

### உள்ளத்தின் உறுதி

கோபத்தை அடக்குவது, பொறாமை கொள் ளாது இருப்பது, தனது பற்றுகளை, ஆசை களை கட்டுப்படுத்திடுவது போன்ற நிலையில் ஒருவன், மன (உள்ளம்) உறுதியை அடைய முடியும். ஒருவனது ஆத்மா தெய்வீக வடிவமானது. அதை ஒருவன் காணும்போது அவன் ஞானத்தை பெற்றிடுவான். உள்ள உறுதியே அதற்கு அஸ்திவாரமாகும்.

### மூவகை தவங்கள்

உடலால் செய்யப்படும் தவம், வாக்கால் செய்யப்படும் தவம், மனதால் செய்யப்படும் தவம் என்று மூவகை தவங்கள் இருக்கின்றன.

பரம்பொருளான இறைவனை வணங்குதல், அந்தணர்களுடன் ஆன்மிக குருவையும் வணங்குதல், தாய், தந்தையருடன் பெரியோ ரையும் வணங்குதல், தூய்மை எளிமையுடன் சிற்றின்பத்தை ஒழித்தல், தீங்கு புரியாது இருத்தல் போன்றவை உடல் சம்பந்தப்பட்ட தவங்கள் ஆகும்.

உண்மையை பேசுவது, நன்மையளிக்கும்படி பேசுவது, இதமாக பேசுவது, மனம் நோகாமல் பேசுவது, வேதங்களை முறையாக ஓதுவது ஆகியவை வாக்குத் தவம் ஆகும்.

சாந்தம், எளிமை, கம்பீரம், சுயக்கட்டுப்பாடு, எண்ணத் தூய்மை போன்றவை மனதால் செய்யப்படும் தவங்கள் ஆகும்.




Orientalische
Textilien & Schmuck
Germany



உரிமையாளர்: எஸ்.ஜெகதீஸ்

சேலைகளின் சோலை!
நங்கையரின் நந்தவனம்
புன்னகைக்கும் பொன் நகைகள்
தங்களை வியப்புக்குள்ளாக்கி நிற்கும்.

தரமான
தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க
நகை மாளிகை

Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

# மலர்களும் அதன் குணங்களும்





## நீண்ட ஆயுளுடன் நலமோடு வாழலாம்!

மலர்கள் நிறமும் மணமும் நிறைந்தவை மட்டும் அல்ல. சில மலர்களிலும் நோய்களை குணப்படுத்தும் குணங்களும் உள்ளன.
இதோ அவ்வாறன மலர்களும் அதில் உள்ள குணங்களும் எவை என பார்ப்போம்.

**செம்பருத்திப்பூ:** இருதய பலவீனம் அடைந் தவர்கள் மற்றும் அடிக்கடி மார்பு வலியால் அவதிப்படுபவர்கள் செம்பருத்திப்பூக் களை தண்ணீரில் இட்டு காய்ச்சி காலையும் மாலையும் குடித்து வந்தால் இருதயம் பலமடையும். குழந்தைகளுக்கு இப்பூவை சிறிது சுடுநீரில் தலையில் தேய்த்துக் குளிப்பாட்டி வந்தால் தலையில் உள்ள அழுக்குகள் நீங்கி முடி நன்கு வளரும். உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

**ரோஜாப்பூ:** இருதயத்திற்கும், மனதிற்கும் வலிமை தரக்கூடியது. பசும் பாலில் ரோஜா இதழ்களை தூவி குடித்துவந்தால் நெஞ்சில் சளி பிடிக்காது நீங்கிவிடும். இரத்தவிருத் திக்கும் துணைசெய்யும். சிவப்பு ரோஜாக்கள் மிகவும் உபயோகமானது.

**மல்லிகைப்பூ:** தலையில் சூடிக்கொள்வதால் கண்பார்வை கூர்மையாக்கும் சக்தி இதற்கு உண்டு. உணர்ச்சிகளைத்தூண்டும் ஆற்றலும் அதிகரிக்கும். கிருமிநாசினியாகவும் செயல் படுகிறது.

**முருங்கைப்பூ:** ஆண்களுக்கு ஆண்மையை அதிகரிக்கச்செய்து தாதுப்பெருக்கம் அடையச் செய்யும் தன்மையது. அதை சுண்டல் செய்து சாப்பிடுவதால் வயிற்றில் உள்ள கிருமிகள் அழிந்துவிடும்.

**குங்குமப்பூ:** கர்ப்பம் தரித்த பெண்கள் ஒருநேரம் 5 முதல் 10 வரை குங்குமப்பூ இதழ்களை இரவு பகல் பாலில் போட்டு காய்ச்சிக் குடித்து வர சீதள சம்பந்தமான நோய்கள் நீங்கும். பிறக்கின்ற குழந்தை நல்ல திடகாத்திரமாக இருக்கவும் குங்குமப்பூ உபயோகப்படுகிறது.

**வேப்பம்பூ:** சிறந்த கிருமி நாசினி இப்பூவாகும். இப்பூ வீட்டில் இருந்தால் சின்னஞ்சிறு கிருமிகள் ஓடிவிடும். உடல் குளிர்ச்சிக்கு ஏற்றது. இப்பூவை சுண்டல் செய்து சாப்பிட வயிற்றில் உள்ள கெட்ட கிருமிகளை அழித்துவிடும். சிறிது கசப்புத்தன்மை கொண்ட இப்பூவை வடகம் போன்று செய்து வெயிலில் உலர்த்தி காயவைத்து நல்லெண்ணெய் நெய் இவற்றில் பொரித்து சாப்பிடுவதால் கர்ப்பப்பை பூச்சிகள் கோளாறுகள் நீங்கி சிறந்தபலனை அடையலாம். சர்க்கரை வியாதியையும் கட்டுப்படுத்தும் தன்மைகொண்டது.

**வாழைப்பூ:** வாழவைக்கும் வாழைப்பூ மிகுந்த மருத்துவ குணம் கொண்டது. இதை சுத்தம் செய்து சுண்டல் செய்து சாப்பிடுவதால் மலச்சிக்கலை நீக்கிவிடும். அத்துடன் உடலின் தேவையற்ற கழிவுப்பொருள்களை அகற்றும் தன்மை இப்பூவுக்கு உண்டு. வாரத்தில் ஒருமுறையேனும் உணவாக உட்கொள்ளும் போது உணவு செரிமாணம் அடைவது மட்டுமல்லாது எமக்கு மேலதிகமாக தேங் கப்படும் சத்துக்கள் கல்லாகமாறிவிடுவதையும் வாழைப்பூ கட்டுப்படுத்தி கரைத்து விடுகிறது.
கல்லாகும் தன்மை அளவுக்கு அதிகமான உணவால் ஏற்படுகிறது. அது மனிதர்க்கு உடல் உபாதையை மட்டுமல்ல உயிர் ஆபத்தையும் ஏற்படுத்தும். மருந்தாகும் உணவுவககளை அதாவது இலை பூ வகைகள் அதிகம் உணவில் சேர்த்து சாப்பிடுவதால் நீண்ட ஆயுளுடன் நலமோடு வாழலாம்.

StaR-Impex
StaR-Impex
யேர்மனியில் புகழ்பெற்ற
மொத்த விற்பனை நிலையம்
Kipperstr. Tor 3
44147 Dortmund
Tel.: 0231/8602696
Mobil: 0172/2183703
Fax: 0231/8602698 E-Mail: star-impex@live.de

## குறுங்கதை



# ஜாப்பு

**கே.எஸ்.சுதாகர்**

மூன்று கிழமைகள் விடுமுறையைக் கழிப்பதற்காக, ஜனவரி மாதம் மலேசியா சென்றோம். விமானத்திலுருந்து இறங்கியதும் கோலாலம்பூரில் தங்கவேண்டிய ஹோட்டலிற்குச் சென்றோம். அங்கு குளித்துவிட்டு, முதலில் பத்துமலைக் கோவிலுக்குப் புறப்பட்டோம்.

மலேசியாவிலும் பிக்பொக்கற்காரர்கள் முடிச்சுமாறிகள் இருக்கின்றார்கள் என்றும் கவனமாக இருக்கும்படியும் ஏற்கனவே நண்பர்கள் சொல்லியிருந்ததால், எங்கு சென்றாலும் ஆடம்பரங்களைத் தவிர்த்து சிம்பிளாக உடையணிந்து நகைகள் அணியாமல் செல்வது என்று தீர்மானித்திருந்தோம்.

பத்துமலைக் கோவில் கோலாலம்பூரிலிருந்து 13கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்றது. கோவில் அமைந்திருக்கும் இந்தச் சுண்ணாம்புக்குகை 40கோடி ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

140 அடி முருகன் தங்கவிக்கிரகமாக ஜொலித்தார். வருடந்தோறும் சிறப்பாக நடைபெறும் தைப்பூசத் திருவிழாவிற்கு இன்னும் இரண்டுகிழமைகள்தான் இருந்தன. 'மாக்காங்' குரங்குகளின் அட்டகாசம் தாங்க முடியவில்லை. மனைவியின் கையில் இருந்த பூமாலையைப் பறிப்பதற்கு எத்தனித்தது. முயற்சியில் தோல்வி கண்ட குரங்கு, மனைவியின் சுரிதாரின் சோலைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடிவிட்டது. இவற்றையெல்லாம் தாண்டி 272 படிகள் ஏறிமுடியக் களைத்து விட்டோம்.

இங்கே இரண்டு குகைகள் இருக்கின்றன. ஒன்று மிக ஆழமாகச் செல்கின்றது. மற்றக்குகையில்தான் முருகன் எழுந்தருளியுள்ளார். இந்தக்குகைகளில் 'தெமுவான்' என்ற மலேசியப்பழங்குடிகள் வாழ்ந்து வந்ததாகவும், அவர்களும் இந்த மலையை புனிதமாகப் பாவித்ததாகவும் சொல்கின்றார்கள். இந்தக்குகைகளில் காணப்படும் சிலந்திகளும் வௌவால்களும்கூட மாறுபட்ட குணாதிசயங்களைக் கொண்டிருக்கின்றன. மலேசியாவில் வேறு எங்கும் இலாத சில அரிதான விலங்குகளும் இங்குள்ளன.

குகையின் மேலே தெரிந்த துவாரத்தினூடாக சூரியன் எட்டிப் பார்த்தான். கூடவே மலை முகட்டில் ஒடுங்கிய நீர்த்துளிகள் கீழே விழுந்தவண்ணம் இருந்தன. நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து உட்புறமாக மேலும் சிலபடிகள் மேலே சென்றன. அந்தப்படிகள் மீது ஏறி மேலே சென்றோம். உள்ளே பல அடியவர்கள் சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்தார்கள்.




S.K.Silks & Gold Paraadise


டோட்மூண் நகரில் மாபெரும் ராஜ முத்திரை!

பட்டுச் சேலைகளுக்கும்
தங்க நகைகளுக்கும்
நாடுங்கள்...

என்றும் புதியது
அழகின் இரகசியம் அது!

Mr.P.Sritharan
Proprietor
Adler str 33 - 44137 Dortmund

Tel:0231 9501 647



ஐயர் பூசை முடித்து விபூதி சந்தணம் கொடுத்துக்கொண்டிருந்தார். நாங்கள் குகையின் உட்புறமாக வரைந்திருந்த ஓவியங்களையும் சிற்பங்களையும் இரசித்துப் பார்த்தபடி நின்றோம். எங்களைச் சுற்றி பலரும் வியப்புடன் அவற்றைப் பார்த்தபடி நின்றிருந்தார்கள்.

அப்போது என்னருகே நின்ற ஒருவர் என்முதுகைத் தட்டி ஐயர் என்னைக் கூப்பிடுவதாகச் சொன்னார். நான் ஐயர் நிற்கும் திசை நோக்கினேன். அவர் என்னை அங்கே வரும்படி சைகை செய்தார். இத்தனை மனிதர்களின் முன்னேஇ மிகவும் தூரத்திலிருந்தபடியே அவர் என்னைக் கூப்பிட்டார். ஒருவேளை என்னைத் தெரிந்தவராக இருக்கலாமோ என நினைத்து நான் அவரை நோக்கி விரைந்தேன். தூரத்தே குரங்குகளுடன் சேஷ்டை புரிந்து கொண்டிருந்த மகனையும் கூட்டிக்கொண்டு பின்னாலே மனைவி வந்து கொண்டிருந்தார்.

ஐயரை அண்மித்ததும் அவர் எனக்கு பிரசாதம் தந்து என் கையிலே நூல் ஒன்றைக் கட்டினார். மனைவியும் மகனும் தங்கள் கைகளையும் நீட்டினார்கள். மனைவியின் கைகளிற்குள் அவர் சில நூல்களைக் கொடுத்துவிட்டு மகனிற்கும் நூலைக் கட்டிவிட்டார்.

”கவனமாக இருக்கும்படி கடவுளே சொல்லி விட்டார்” அங்கிருந்து விடைபெறும் போது மனைவி சொல்லிக் கொண்டார். அதன் பின்னர் எங்கு சென்றாலும், மனைவியை நடுவிலே விட்டு நானும் மகனும் அவருக்கு துவாரபாலகர்கள் ஆனோம்.

ஹோட்டலுக்குச் சென்று சற்று நேரத்தில் எல்லாம் மகனின் கையிலிருந்த நூல் கழன்று விழுந்துவிட்டது. மஞ்சள்கலர் நூலைக் கட்ட மனைவிக்குப் பிரியமில்லை.

கோலாலம்பூர், பெனாங், லங்காவி ஜலண்ட, கமரூன் கைலாண்ட்ஸ் என்று சுற்றித் திரிந்தோம். இனிதே விடுமுறை கழிந்த்து. சரவணபவானை விட செட்டிநாட்டுச் சாப்பாட்டுக் கடையே எங்களைக் கவர்ந்தது. தினம் தினம் அசைவச் சாப்பாட்டைச் சாப்பிட்டு கொலஸ்ரோலை ஏற்றினோம். அங்கிருந்த நாட்களில் எதுவித பிரச்சினைகளும் நமக்கு ஏற்படவில்லை.

அவுஸ்திரேலியா திரும்பினோம். மலேசியா பற்றிய கதைகளை தினமும் கதைத்தோம். பங்குனி மாதம் ஒரு சனிக்கிழமை பகல் தூக்கத்தின் பின்னர் விழித்தெழுந்தபோது என் இடதுகண்ணில் பார்வை இருக்கவில்லை. நிறங்களைப் பிரித்தறியாதபடி கறுப்பு வெள்ளையில் எல்லாமே மங்கலாகத் தெரிந்தன. கண் வைத்தியரிடம் சென்றபோது, உடனே ஸ்பெஷலிஸ்ரை சந்திக்கும்படி சொன்னார். என் கண்ணிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்பு வெடித்துவிட்டதாக அவர் சொன்னார். அதற்கு எந்தவித ஒப்பரேஷனுமே பலனளிக்காது என்றும் இரண்டு வாரங்கள் கழித்து மீண்டும் தன்னை வந்து சந்திக்கும்படியும் சொன்னார். கூடவே ஆறுமாதங்கள் கார் ஓடக்கூடாது என்று ஒரு மிரட்டல் கடிதமும் தந்தார்.

அவரது மிரட்டலுக்கு நான் பயப்படவில்லை. கவுண்டமணி குத்துமதிப்பில் கார் ஓடியது போல வேலைக்கு மாத்திரம் போய் வந்தேன். சிக்னலில் நிறவிளக்குகள் நிறம் மாறுவது தெரியவில்லை. சிக்னல் லைற்றில் எனக்கு முன்னால் யாராவது நின்றுவிட்டால், அன்று எனக்கு அதிஷ்டம்தான். உடனே இரட்டைப் புலவர்கள் ஞாபகத்திற்கு வந்துவிடுவார்கள்.

சரியாக மூன்றுநாட்களின் பின்னர் மீண்டும் நிறத்தைப் பார்க்கும் வரம் பெற்றேன். அப்போது என் கண்கள் மணிக்கட்டை சுற்றியிருந்த அந்த மஞ்சள்நூலையே முதலில் பார்த்தது.

மனைவி கட்ட விரும்பாத்தும், மகனின் கையிலிருந்து மூன்று மணி நேரத்தில் தானாகக் கழன்று விழுந்ததுமான அந்த மஞ்சள்நூல் என்கையிலே மூன்று வருடங்களிற்கும் மேலாக நிலைத்திருந்தது.

ஒருநாள் அது தானாகக் கழன்று விழுந்தபோது என் கண் பார்வையில் தொண்ணூறுசதவிகிதம் மீட்சி பெற்றிருந்தேன்.




திருமூலர்-டார்வின்- ஜொகான் கிரகொரி மாண்டெல்

நவீன உயிரியல் விஞ்ஞானத்தின் மிக மிக முக்கியமான கண்டுபிடிப்புகள் இரண்டு.

1. பரிணாம வளர்ச்சித் தத்துவம்.
2. மரபியல் தத்துவம்.

டார்வின் கண்டுபிடித்த பரிணாம வளர்ச்சித் தத்துவம் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். சுருக்க மாகச் சொல்வதெனில், "குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான்" என்று விளக்குவதே பரிணாம வளர்ச்சித் தத்துவம்.

முதன் முதலில் அமீபா போன்ற ஒரு செல் உயிரினங்கள் தோன்றின. பல கோடி வருடங் களில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியால் படிப் படியாக உயர் வளர்ச்சி பெற்ற உயிரினங்கள் தோன்றின. கடைசியாக மனிதன்! பரிணாம வளர்ச்சியின் உச்சாணிக் கொம்பில் தற்போது இருப்பவன் மனிதனே! பரிணாம வளர்ச்சித் தத்துவம் மதங்கள் கூறும் படைப்புத் தத்துவத் திற்கு எதிராக இருப்பதால், ஆரம்ப காலத்தில் டார்வினின் தத்துவத்திற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது. ஆனால் விஞ்ஞானம் வளர வளர, டார்வினின் தத்துவம் உண்மை என்பது புரிந்ததால் இன்று உலகம் முழுவதும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

டார்வினின் பரிணாம வளர்ச்சித் தத்துவத்தில் இன்னமும் விடை தெரியாத பல கேள்விகளும் புதிர்களும் உள்ளன. அவை குறித்த ஆராய்ச்சி களும் விவாதங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தாய், தந்தையரின் சாயல்களும் தன்மைகளும் எவ்வாறு அவர்களின் குழந்தைகளை வந்து சேர்கின்றன என்பதை விளக்குவதே மாண் டெலின் மரபியல் தத்துவமாகும். ஜொகான் கிரகொரி மாண்டெல் (1822-1884) ஆஸ்திரியா நாட்டைச் சார்ந்த ஒரு கிறிஸ்துவத் துறவி. கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றை கற்றுத் தேறிய இவர் ஒரு மிகச் சிறந்த தோட்டக் கலை வல்லுநராகவும் இருந்தார். தனது மடத்திலுள்ள தோட்டத்தில் பலவகையான செடிகளை ஒட்டு செய்து இவர் நடத்திய திறமையான ஆராய்ச் சிகளே மரபியல் எனும் மிகப்பெரிய விஞ் ஞானத்துறையின் கதவுகளைத் திறந்தது.

இன்று மரபியலின் தந்தை என்று மாண் டெல் போற்றப்படுகிறார். அவர் உயிரோ டிருந்த காலத்தில் அவரது மரபியல் தத்துவத்தை விஞ்ஞான உலகம் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. 1884- ஆம் ஆண்டு மாண்டெல் இறந்த பின்னர், அவரது தத்து வத்தை அடிப்படையாகக் கொண்டு வேறு பல விஞ்ஞானி கள் தொடர்ந்து ஆராய்ச்சிகளை நடத்தினர்.

1890-ஆம் ஆண்டில்தான் மாண்டெல் கண்டு பிடித்த மரபியல் தத்துவம் முழுக்க முழுக்க உண்மை என்பதை விஞ்ஞான உலகம் ஏற்றுக் கொண்டது. அதன் பின்னர் கடந்த 120 ஆண்டுகளில் நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு மரபியல் விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றுவிட்டது. இன்று குளோனிங் முறையில் ஆடு, பன்றி, முயல் என உருவாக்க முடிகிறது.

நவீன மரபியல் விஞ்ஞானத்தின் வயது 120 ஆண்டுகள்தான். ஆனால் மாண்டெல் மரபியல் தத்துவத்தைக் கண்டறிவதற்கு முன்னரே பாமர மனிதன்கூட தனது அனுபவத்தில் அதை உணர்ந்திருந்தான். ஏன்? எதற்கு? எப்படி என்பவைதான் அவனுக்குத் தெரிந்திருக்க வில்லை.

குழந்தை பிறந்த வீடுகளில் இந்த உண்மையை இன்றும்கூட கண்கூடாகக் காணலாம். குழந்தை யைக் காண வருகிறவர்கள் ஆளாளுக்கு ஒரு அபிப்பிராயம் கூறுவார்கள். "அப்பனை அப்படியே உரிச்சு வச்சிருக்கான்", "அவ அம்மா கண்ணு அப்படியே வந்திருக்கு" "காது இரண்டும் அவன் அப்பத்தா மாதிரியே தூக்கிட்டு இருக்கு", "அவன் மாமன் மாதிரியே திருட்டு முழி முழிக்கி றான்" என பல வகையான அபிப்பிராயங்கள் வெளிவரும். மூதாதையரின் சாயல் சந்ததியி னருக்கு வரும் என்பது பன்னெடுங்காலமாகவே அறியப்பட்டி ருந்த ஒரு உண்மைதான்.

120 ஆண்டுகளே ஆன நவீன மரபியலின் சாராம்சத்தை 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலர் தனது திருமந்திரத்தில் அற்புதமாக விளக்கியுள்ளார். விந்துவிலுள்ள ஆண், பெண் குரோமோசோம்கள் (x y) குறித்து திருமூலர் கூறியுள்ளதை ஏற்கெனவே கண்டோம். இனி மரபியல்



XY Chromosom

குறித்த மற்றொரு பாடலைக் காணலாம்.
”ஏய் அங்கு அலந்த இருவர்தம் சாயத்துப்
பாயும் கருவும் உருவாம் எனப் பல
காயம் கலந்தது காணப் பதிந்தபின்
மாயம் கலந்த மனோபலம் ஆனதே“.

-திருமந்திரம் பாடல் எண்-268.

இந்தப் பாடலின் பொருளை சுருக்கமாகக் காணலாம்.

”பல பிறவிகள் எடுத்து வருந்திய அந்த ஆன்மா வானது, தந்தையின் சுக்கிலம் வழியாகத் தாயின் கருப்பையிலுள்ள கரு முட்டையை அடைந்து ஒரு கருவாக உயிர்கொள்ளும் போது, தாய், தந்தை இருவரின் உடலிலுள்ள பலவகை தத்துவங்களும் விகாரங்களும் அந்தக் கருவினுள் பதிவதோடு, கருவில் அவர்களது சாயலும் பதியும். அதுமட்டுமின்றி, அவர்களது மனதிலுள்ள எண்ணங்கள், உணர்வுகள் போன்றவையும்கூட சேர்ந்து பதியும்.“

மரபியலின் தந்தை மண்டெல் 120 ஆண்டு களுக்குமுன் கண்டுபிடித்ததை நமது திருமூலர் 1600 ஆண்டுகளுக்கு முன்னரே எவ்வளவு அற்புதமாக விளக்கியிருக்கிறார்!

இனி இந்தத் திருமந்திரப் பாடலில் பொதிந் துள்ள சில சூட்சுமமான விஷயங்களை சற்றே அலசிப் பார்க்கலாம்.

தாய், தந்தையரின் சாயல் குழந்தைகளுக்கு வரும் என்பது அனைவரும் அறிந்த உண்மை தான். ஆனால் திருமூலர் இங்கு தரும் புதிய செய்தி- தாய், தந்தையரின் மனதிலுள்ள எண்ணங்களும் உணர்வுகளும்கூட கரு விலுள்ள குழந்தையிடம் வந்து பதியும் என்பதுதான்!

கருவுற்ற காலத்தில் பெண்ணின் மனநிலையும் எண்ணங்களும் உணர்வுகளும் நல்ல நிலை யில் இருப்பது அவசியம் என்பதை இன்று நவீன மருத்துவ விஞ்ஞானம் ஏற்றுக் கொள்கிறது. கருவைச் சுமக்கும் காலத்தில் பெண்ணின் மன நிலையில் ஏற்படும் எதிர் மறையான மாற்றங்கள் கருவிலிருக்கும் குழந் தையையும் பாதிக்கும் என்பதைப் பல ஆய்வுகளின் மூலம் நிரூபித்திருக் கிறார்கள்.

ஆனால் திருமூலர் அதற்கு மேலும் ஒரு படி சென்று, கரு உருவாகும் வேளையிலேயே தாய், தந்தை இருவரின் மனதிலுள்ள எண்ணங்களும் உணர்வுகளும் (விந்தின் வழியாகவும், கருமுட்டையின் வழியாகவும்) கருவில் பதிந்து விடுகின்றன என்கிறார். ஆக, ஒரு ஆணும் பெண்ணும் நல்ல உணர்வுகள், நல்ல நினைவுகள், எண்ணங்கள் ஆகிய வற்றால் நிரம்பியிருந்தால் மட்டுமே அவர்களின் கூடலால் உருவாகும் கருவும் நல்ல நிலையில் பிறக்கும். நல்லவனாக வளரும்.

”தினை விதைத்தால் தினை முளைக்கும்- வினை விதைத்தால் வினை முளைக்கும்“ என்ற பழமொழிக்கு இது ஒரு சரியான உதாரணம்.

அடுத்ததாக, பாடலின் முதல் வரியில் ஒரு சூட்சுமம் உள்ளது. அதைக் காண்போம். பாடலின் துவக்கமே, “பல பிறவிகள் எடுத்து வருந்திய ஆன்மா“ என்றே துவங்குகிறது. இந்தப் பாடலில் முந்தைய பிறவிகள் குறித்துப் பேச வேண்டிய அவசியம் என்ன?

மரபணுக்கள் எனப்படும் ஜீன்களின் வழியா கவே மூதாதையர்களின் சாயல், குண நலன்கள் போன்றவை குழந்தையை வந்தடை கின்றன என்பது உண்மைதான். ஆனால் கருவிலிருக்கும் ஆன்மா ஏற்கெனவே பல பிறவிகளைக் கடந்து வந்துள்ளது. ஒவ்வொரு பிறவியிலும் பல அனுபவங்களை அது சந்தித் திருக்கும். பல உணர்வு நிலைகளை எதிர் கொண்டிருக்கும். ஒவ்வொரு பிறவியிலும் பல புதிய விஷயங் களைக் கற்றுக்கொண்டிருக்கும் அல்லவா? இந்த முன்ஜென்மத்து நினைவு களும் உணர்வுகளும் அனுபவங்களும் கற்றுக் கொண்ட விஷயங்களும்கூட அந்த ஆன்மா கருவினுள் நுழையும் போது கூடவே வந்து பதிந்து விடுகின்றன.

இந்த உண்மையை நவீன மரபியல் விஞ்ஞானம் இதுவரையில் அறிந்து கொள்ள வில்லை. பூர்வ ஜென்மங்களின் நினைவுகளும் கருவில் வந்து பதியும் என்பதை சூட்சுமமாக உணர்த்தவே திருமூலர் இப்பாடலில் பூர்வ ஜென்மங்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

விஞ்ஞானத்தால் இதுவரையில் உணரப் படாத இந்தக் கருத்து ஏற்புடையதுதானா? உண்மை யாக இருக்க முடியுமா என்ற சந்தேகம் இயல்பாகவே எழும். இது உண்மையே என்பதற்குப் பல சான்றுகளை அடுக்க முடியும்.

**தொர்ச்சி 31 பக்கம்**

# இறைவன் படைப்பில் தாய்!



**சேவியர்**



தாய் எனும் உறவு, எந்த விதமான மகத்துவத்தோடும் ஒப்பிட முடியாத உறவு. தன்னலத்தின் ஒரு சிறு துரும்பு கூட இல்லாத தூய்மையைச் சொல்ல வேண்டுமெனில் தாயன்பைத் தான் சொல்ல வேண்டும். எல்லோருடைய மனதிலும் அம்மாவைப் பற்றிய பிம்பங்களும், பிரமிப்புகளும், நினைவுகளில் நீங்காமல் இருக்கும். பெரும்பாலான நினைவுகளை புரட்டிப் பார்த்தால் அவை பால்ய காலத்து நினைவுகளாகவே இருக்கும்.

மழலைக் காலம் தான் அன்னைக்கும், குழந்தைக்கும் இடையேயான தூய்மையான உறவின் முகவுரையை எழுதுகிறது. இறைவனின் படைப்பில் குறை என்று எதுவுமே இல்லை. பச்சைக் குழந்தை பால்குடிக்கத் துவங்கும் போது அந்தக் குழந்தையால் சுமார் 15 இன்ச் தூரம் தான் பார்க்க முடியுமாம். அது ஒரு தாயின் மார்புக்கும், முகத்துக்கும் இடைப்பட்ட தூரம். பாலும், பாசமும் ஒரே நேரத்தில் குழந்தை அருந்த இறைவன் செய்த விந்தை இது என்றால் மிகையில்லை.

"தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்" என்கிறது பைபிள். இறைவனின் அன்பை ஒப்பீடு செய்ய ஒரு தாயின் அன்பை இறைவனே தேர்ந்தெடுக்கிறார் என்றால், அவர் தாயன்பை உலகின் உன்னத அன்பாய் நிலைநாட்டியிருக்கிறார் என்பது தானே பொருள்.

அன்னையைப் பற்றிப் பேசும்போது ஒரு பிரபலமான யூதப் பழமொழியைச் சொல்வார்கள். "கடவுளால் எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் இருக்க முடியாது என்பதனால் தான் அன்னையைப் படைத்தார்" என்று ! கடவுளின் பிரதிபலிப்பாகவும், பிம்பமாகவுமே அன்னை நமக்கெல்லாம் தரப்பட்டிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

இந்த உலகம் தொழில்நுட்பத்தினாலோ, அழகினாலோ, வளங்களினாலோ கட்டி எழுப்பப்படவில்லை. அது அன்பினால் கட்டி எழுப்பப் படுகிறது. அன்பை நீக்கி விட்டுப் பார்த்தால் உலகம் வெறுமையின் கூடாரமே ! ஒரு மனிதனின் வாழ்நாளை அலசி ஆராய்ந்து பாருங்கள். அவன் நல்ல மனிதனாய் வாழ்கிறானா இல்லையா என்பதை அவன் தனது தாயை நேசிக்கிறானா இல்லையா என்பதை வைத்து அளவிடலாம். தாயை நேசிக்காத மனிதனால் மற்ற எதையும் ஆத்மார்த்தமாய் நேசிக்க முடியாது. தாயின் நேசத்தைப் பெறாதவர்களே பிற்காலத்தின் நிம்மதியற்ற, வரையறயற்ற, ஒழுங்கீனமான வாழ்க்கைக்குள் செல்கின்றனர். அன்னை தான் ஒரு குழந்தைக்கு சரியான வழியையும், வாழ்வையும் காட்ட முடியும்.

உங்கள் பெற்றோர் மீது அன்பும், மரியாதையும் வையுங்கள். அவர்களை முதிர் வயதிலும் பாதுகாத்து நேசியுங்கள். என்கிறது இஸ்லாமிய புனித நூல் குரான். ஒரு தாய் குழந்தையை நேசிக்கும் அதே நேசத்தில் தேசத்தையும் நேசியுங்கள் என்கிறார் புத்தர். கணக்கற்ற தெய்வங்களை அன்னையாய் பாவித்து அன்னைக்கு அதிகபட்ச மரியாதை செலுத்துகிறது இந்து மதம். தாயை நேசிக்க வேண்டாமெனச் சொல்லும் மதங்கள் இல்லை ! தாயின்றிப் பிறந்த மனிதர்களும் இல்லை.

உலகையெல்லாம் உருக உருக நேசித்து விட்டு, தனது தாயை முதியோர் இல்லம் அனுப்புபவர்கள் போலித்தனத்தின் பிம்பங்கள்.

வர்கள் வெள்ளியடிக்கப்பட கல்லறைகள். வெறும் பெருமைக்காகத் திரிபவர்கள். அவர்கள் அன்பின் அரிச்சுவடி கூடத் தெரியாதவர்கள். இன்று உலகெங்கும் முதியோர் இல்லங்கள் புற்றீசல் போலக் கிளம்பி விட்டன. மாதம் தோறும் பணத்தைக் கட்டி கால்நடைகளைப் பராமரிக்க குத்தகைக்கு விடுவதைப் போல மனிதர்கள் செயல்படுகிறார்கள்.

தன் குழந்தையை அரை நொடி கூட இடுப்பை விட்டு இறக்கிவிட மனமில்லாமல் சுமந்து சுமந்து மகிழ்வார்கள் அன்னையர். நிலவைக் காட்டியும், நிலத்தைக் காட்டியும் சோறூட்டுவார்கள். இடுப்பில் சுமந்து கொண்டு மைல்கணக்காய் நடந்து திரிவார்கள். வினாடி நேரமும் விடாமல் நெஞ்சில் சுமந்து திரிவார்கள். அத்தகைய அன்னையரைக் கடைசியில் மகன் முதியோர் இல்லங்களில் தள்ளி விடுகிறான்.

முதியோர் இல்லங்களின் மூலைகளில் தன் மகனின் வருகைக்காக காத்திருந்து காத்திருந்து ஒரு முறை கூட எட்டிப் பார்க்காத மகனின் நினைவுகளுடன் ஏக்கத்தில் இறந்து போகும் அன்னையர் ஏராளம் ஏராளம். முதுமை என்பது இறைவனின் ஆசீர்வாதத்தின் அடையாளம். முதுமை வரை வாழ்கின்ற பெற்றோரைக் கொண்டிருப்போர் வாழ்க்கையில் அதீத அன்பை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள். அத்தகைய முதுமைப் பெற்றோரை ஒரு குழந்தையைப் போல பாதுகாப்பதில் இருக்கிறது மனிதத்தின் அழகிய வெளிப்பாடு.

கண்டதும் காதல் என்பார்கள், காணாமலேயே வருகின்ற அளவற்ற காதல் அன்னையிடம் தான் உருவாகும். தனது வயிற்றில் சுமக்கும் கருவின் உருவம் தெரியாமலேயே அதில் உயிரை வைத்து உருவாக்க அன்னையால் மட்டுமே முடியும். அதனால் தான் தாய் இரண்டாம் இறைவனாகிறாள். குழந்தையின் முதல் அழுகையில் மட்டும் ஆனந்தமடைந்து, அடுத்தடுத்த அழுகைகளில் கூடவே அழும் அதிசய உள்ளமாகிறாள்.

வாழ்வின் உன்னதத் தருணங்களை இரண்டு இடங்களில் தான் அனுபவிக்க முடியும். ஒன்று உங்கள் அன்னையின் அருகாமையில், இரண்டு, உங்கள் குழந்தைகளின் அருகாமையில். இரண்டுமே தாயன்பு தவழும் இடங்கள்.

தாயன்புக்கு ஈடாக எதைச் சொல்ல முடியும் ? கவிஞர் கலீல் ஜிப்ரானின் வார்த்தைகள் கவிதையாய் விழுகின்றன. ”

அன்னை தான் எல்லாமே ! கவலைகளின் ஆறுதல். துயர நேரத்தின் நம்பிக்கை. பலவீனத்தை நிரப்பும் பலம். அன்பின் துவக்கம், இரக்கமும் மன்னிப்பும் உறையுமிடம். அன்னையை இழப்பவர்கள் “ஆசீர்வதிக்கும், பாதுகாக்கும்“ தூய ஆன்மாவை இழந்து விடுகிறார்கள்.”

தாய் இறைவனின் பிம்பம். சின்ன சொர்க்கத்தை வீடுகளில் இறக்கி வைக்கும் கடவுளின் பிரதிநிதி. அன்னையை நேசிக்கத் தெரியாதவர்கள் வாழ்க்கையை வாசிக்கத் தெரியாதவர்கள். மனிதர் என்று அவர்களை அழைக்க மறுதலித்து விடுங்கள்.

அன்னையை நேசிப்போம். நிஜத்தில் வாழ்த்தாலும், நினைவில் வாழ்ந்தாலும்.








இலங்கையின் வடபகுதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கானைமேற்கு வடலிய டைப்பு என்னும் கிராமத்தில் வாழ்ந்த கந்தையா செல்லம்மா செய்த தவப்பயனாக முறையே காலஞ்சென்ற அமிர்தம்,சிவஞானம், சீவரத்தினம், கண்மணி ஓய்வுபெற்ற ஆசிரியை நவநிதி கொழும்பில் வசித்து வரும் கனகாம் பிகை காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோர் பிள்ளைச்செல்வங்களாக அவதரித்தனர்.

ஐந்தாவது மகளாகிய நவநிதி 1920 ஆண்டு பங்குனி மாதம் 11ம் திகதி அவதரித்து கல்வியில் தேர்ச்சிபெற்று 1947 இல் கோப்பாய் ஆசிரியர் கலாசலையில் பயிற்றப் பட்ட ஆசிரியையாகவும் தேர்ச்சிபெற்று ஆசிரி யப்பணியை ஆரம்பித்தார்.
பெரியோர்களின் நல்லாசியுடன் யாழ்ப்பாணத் தில் குரும்பசிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த கந்தவனம் செல்லமுத்து தம்பதிகளின் செல் வப்புதல்வன் ஆசிரியர் மு.க.சுப்பிரமணியம் அவர்களை திருமணம் செய்து இல்லற பந்தத்தில் இணைந்தார்.

அவர்களின் இனிய இல்லறபந்தத்தில் பிள்ளைச்செல்வங்களாக கலாநிதி,சிவகுமாரன் சிவராஜன்,தயாநிதி,பதுமநிதி ஆகிய ஐந்து செல்வங்களைப் பெற்றெடுத்தனர். காலத்தால் அழியாத கல்விச்செல்வத்தை ஊட்டி வளர்த் தனர்.

காலத்தின் கோலத்தில் வாழ்வின் நியதிக் கமைய 1980 ஆண்டு மருமகன் லோகதாசன் அவர்கள் அமரத்துவமடைய அவரைத் தொடர்ந்து சிலவாரங்களில் தன் கணவரும் அமரத்துவமடைய மனம்தளராது அவர் வாழ்க்கைப் பயணத்தை இறையருளுடன் தொடர சங்கற்பம்கொண்டு சிறப்பாக வழி நடத்தி திருப்தியுற்றார்.

உரியபருவத்தில் பிள்ளைகளுக்கு மணம் முடித்து மகிழ்ந்தனர்.
மகள் கலாநிதி குரும்பசிட்டியைச் சேர்ந்த செல்வநாயகம். லோகதாசன் அவர்களை மணந்து ஜெயநிதி,ஜெயவதனி,ஜெயரூபன் ஆகிய செல்வங்களைப் பெற்றார். கணவனின் இழப்பிலும் கலங்காது பிள்ளைகள் நலமே தன்னலமென இங்கிலாந்தில்பிள்ளைகளுடனும் ஜெயநிதி(நாவரசன்) ஜெயவதனி(நிதர்ஷன்) பேத்தி சாதனா (ஜெயரூபன்-கவிதா) இவர் களுடன் மகிழ்வாக வாழ்ந்து வருகின்றார்.

மகன் சிவகுமாரன் அராலி மேற்கைச் சேர்ந்த சு.தில்லையம்பலம்- பத்மாவதி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெயபவானி அவர்களை மணந்து சிவஜெனனி சஞ்ஜீவன் ஆகிய இரு செல்வங்களைப்பெற்று அவர்களுக்கு உரிய பருவத்தில் திருமணம் செய்து சிவஜெனனி (அரவிந்தன்) பேரக்குழந்தைகள் பிரியன், மீனாட்சி,கீதன் (சஞ்ஜீவன் - ஜனனி) இங்கிலாந் திலும், சிவகுமாரன் ஜெயபவானி யேர்மனி யிலும் மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றனர்.

மகன் சிவராஜன் குரும்பசிட்டியைச் சேர்ந்த செல்லையா தங்கரத்தினம் தம்பதிகளின் செல்வப்புதல்வி வாணியைத் திருமணம் செய்து சுரம்யா புருஷோத் ஆகிய இரு செல்வங்களைப் பெற்று கனடாவில் சிறப்புற வாழ்கின்றனர்.

மகள் தயாநிதி குரும்பசிட்டியைச் சேர்ந்த தங்கவேல் ஜெகதீஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் மோகனை மணம்முடித்து மகள் நிவேதிதா (லோகுலன்) இங்கிலாந்திலும் மோகன் தயாநிதி இலங்கையிலும் மகிழ்வாக வாழ்கின்றனர்.

தொடர்ச்சி 29ம் பக்கம்.

மகள் பதுமநிதி ஊரெழுவைச்சேர்ந்த தனேஸ் வரன் - அன்னம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வன் அன்பழகனை திருமணம் செய்து ஆதவன்,ராகவன்,அமிர்தா, எனும் முச்செல்வங் களுடன் கனடாவில் வாழ்ந்து வருகின்றார்.

தன்பிள்ளைகளுடன் அன்பாகவும் இன்சொல் பேசுவதில் மகிழ்வாகவும் தன்காலத்தைக் கழித்த, அவர் எல்லாப்பிள்ளைகளிடமும் சென்று சிலகாலம் அவர்களின் அரவணைப்பில் மகிழ்ந்து, பேரப்பிள்ளைகளுடனும் பூட்டப் பிள்ளைகளுடனும் கொஞ்சி மகிழ்ந்து, பின் தாய்நாட்டிற்கே வந்து, தன் மகள் தயாநிதி மோகன் அவர்களுடன் வசித்துவந்தார்.
தனது ஓய்வு நேரத்தை அறிவான விடையங் களுடனும் தனது ஓய்வுதியத்தை அறநெறி யிலும் செலவுசெய்து மகிழ்ந்தார்.
முதுமைக்காலத்தைப் பயனுள்ளதாக இருக்க நிறைவான புத்தங்களை வாசிப்பதுடன், மகாபாரதம், இராமாயணம் பல தடவை பார்த்து அதிலுள்ள உட் பொருளை விளங்கி ஆனந்த மடைந்தார். எப்பொழுதும் பக்தியுணர்வுடன் வாழ்ந்து இறைவனது வழிநடத்தல்களை எண்ணி மகிழ்ந்தார்.

வாழும்வரை தன்காலிலேயே நின்று எவருக்கும் பாரமாகமல் முழுமையான அறிவுடன் உணர் வுடன் கடந்த 03.10.2013 வியாழக்கிழமை காலை 5.15 க்கு பரம்பொருளுடன் சங்கம மானார்.
இப்படித்தான் முதுமைக்காலத்தைக் கழிக்க வேண்டும் என்று எமக்கெல்லாம் வாழ்ந்து காட்டிச்சென்றுள்ளார்.
ஆன்மாவின் பலத்தை அவரது ஒவ்வொரு செயலிலும் காணமுடிந்தது, நாம் அவரை நம் தாயாராகப் பெற்றது இவ் வையகத்தில் நாம் பெற்ற பெரும்பேறாகும்.
அவர் ஆத்மா சாந்தியடைவதாக!

அமரர் நவநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆசிரியப்பணி புரிந்த ஒவ்வொரு பாடசாலை யிலும் பலமணிகளை உருவாக்கி மகிழ்ந்தார். அவரது ஆசிரியக் குறிப்பேட்டில் இருந்து அவர் கல்விகற்பித்தபாடசாலைகளின் விபரங்களை இங்கு தருகின்றோம்.
அவர்களது மாணவர்கள் அறிய இது வாய்ப்பாகும்.

**ஆசிரிய பயிற்சிக்கலாசாலை (கோப்பாய்)** 1947 **இல் சித்திபெற்று வெளியேறியபின்.**




**குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலத்தில் அதிபராக இருந்து ஓய்வுபெற்றவேளை இடம்பெற்ற பிரிவுபசாரத்தில் தன் கணவருடன் ஆசிரியை திருமதி நவநிதி சுப்பிரமணியம்**

மாத்தளை சகிரா கல்லூரி- 1.06.1948 முதல் 31.01.1949 வரை

நாலப்பிட்டி பரியோவன் கல்லூரி (St.Andrews College) 1.2.1949 இருந்து 31.12.1949 வரை

நாவலப்பிட்டி கதிரேசன் பாடசாலை 1.1.1950 முதல் 2.1.1955 வரை

வெலம்பொடை பு.வு.ஆ.ளு பாடசாலை 3.1.1955முதல் 31-1-1957 வரை

பூண்டுலோயா தமிழ் மகாவித்தியாலயம் 1.08.1957 முதல் 31.7.1958 வரை

யாழ்- பலாலி சாதனா பாடசாலை 1.08.1958 முதல்14.06.1961 வரை

நவாலி சிரேஷ்டபாடசாலை 15.06.1961முதல் 29.02.1964 வரை

ஒட்டுசுட்டான் காதலியார் சம்மளம் குளம் 1.03.1964 முதல் 2.02.1968 வரை

யாழ்.குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாசாலை 3.02.1968 முதல் 18.03.1978 வரை

# திருமுருகன் திருமண மண்டபம்




இன்று யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்ற கல்யாண மண்டபம்



**திருமுருகன்**
திருமண மண்டபமும்,
**பல்பொருள் அங்காடியும்**

**தாயகத்தில் வாழும் தமிழ்மக்களும், வெளிநாடுகளில் இருந்து வரும் எங்கள் உடன்பிறப்புக்களும், திருமண, மற்றும் மங்கல வைபவங்கள் அனைத்தையும் சிறப்பாக நடத்துவதற்கு ஓர் சிறந்த மண்டபம்** 'திருமுருகன் கல்யாண மண்டபம்"

உரிமையாளர்:
திரு. சிவசுப்பிரமணியம் (செட்டியார்)
தொலைபேசி: 077 66 60 211

**திருமுருகன் கல்யாண மண்டபம்**
**(கந்தசுவாமி கோயில் வடக்குவீதி)**
**கரந்தன் வீதி**
**நீர்வேலி.**
**யாழ்ப்பாணம்.**

25 பக்கத்தொடர்ச்சி

## பிரபஞ்ச ரகசியம்...

சாயல், தன்மைகள், குணநலன்கள் ஆகியவை பரம்பரை பரம்பரையாக ஜீன்களின் வழியே சந்ததியினரை வந்தடைகிறது. சரி ஆனால் ஒரு குழந்தை பிறந்தவுடனேயே தாயின் மார்பில் பால் குடிக்க அதற்குக் கற்றுத் தந்தது யார்?
மனிதர்கள் மட்டுமின்றி, அனைத்து உயிரினங் களிலும் இதைக் காண முடியும். பாலூட்டி இனத்தைச் சேர்ந்த அனைத்துமே பிறந்த உடனேயே தாயின் மடியில் பாலுண்ணத் துவங்கி விடுகின்றன.
அடுத்ததாக, உயிர் வாழும் முனைப்பு என்பது அனைத்து உயிரினங் களிலுமே காணப்படும் ஒரு அடிப்படையான தன்மை. உயிர் வாழ்வ தற்கான போராட்ட உணர்வு பிறக்கும்போதே உயிரினங்களிடம் காணப்படுகிறது. பாலுண்ணு வது, உயிர் வாழப் போராடுவது போன்றவை அனைத்துமே அனிச்சையாக நடைபெறு கின்றன. இவற்றிற் கான ”மென்பொருள்“ ஜீன்களில் இருப்பதாக இதுவரையில் கண்டறியப்படவில்லை.
அப்படியானால், இத்தகைய செயல் களுக்கான பதிவுகள் ஆன்மாவில்தான் இருக்க வேண்டும் அல்லவா? கடந்த ஜென்மங்களில் கற்றுக் கொண்ட அனைத்தின் பதிவுகளும் ஆன்மாவில் உண்டு. இது தவிர கடந்த ஜென்மங்களில் செய்த பாவ புண்ணியங்களின் கணக்கும் (கர்மா) ஆன்மாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
ஒரு ஆன்மா புதிய பிறவி எடுப்பதற்காக ஒரு கருவினுள் நுழையும்போது, அந்த ஆன்மாவில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்தும் சேர்ந்தே கருவினுள் நுழைகின்றன. இவை ஆழ்மனதிலும் சக்தி உடல்களிலும் பதிவாகிவிடுகின்றன. இதை சூட்சுமமாக உணர்த்தவே ”பல பிறவிகள் எடுத்த ஆன்மா“ என்பதை இப்பாட லில் வலியுறுத்துகிறார் திருமூலர்!

## அம்மா!

சர்வம் சிவமயம், சர்வம் சிவன் செயல், என அடிக்கடி கூறும் அம்மா, உடல் வளர்ச்சிக்கு உணவு முக்கியமானது போல, உள்ளம் உயிர் செம்மைப்பட ஒரு தாய் கருவில் உயிரைச் சுமக்கும் போதே “நீயே என்குழந்தைகளாக வருகின்றாய். நீயே இவர்களை வழி நடத்துவாயாக” என வேண்டிக் கொண்டதாக கூறுவா.
எமது இறுதி நாட்களை எப்படிக்களிக்க வேண்டும் என்று ஒரு அம்மா கற்றுத்தந்ததை என்னால் உணர முடிகின்றது. தன் உடல் தளர்வதை தானுணர்ந்து, உள்ளம் பலப் படுத்தி, தன் இறுதி மூச்சை ஆனந்தமாக ஒப்படைக்க தன்னைத் தயார்ப் படுத்திய அழகு, அம்மா வாழ்க்கையின் முடிவின் சிறப்பை இறுதியாகவும் எமக்குக் கற்றுத் தந்தா!
**நன்றி அம்மா**
**உங்கள் கலா**




**நவநிதி சுப்பிரமணியம்**

வெற்றிமணி அம்மா!சிவத்தமிழ் தாயே!!
காலத்தின் மாற்றத்தைக் கனிவுடன் ஏற்று வெற்றிமணியை 20 வருடங்கள் நான் நடத்த நயத்துடன் மகிழ்ந்து வாசித்தாய். சிவத்தமிழ் ஒலிக்க சிந்தை மகிழச் சுவாசித்தாய். என் எழுத்துக்கு உயிரானாய் சிவ மயமானாய்! **மகன் கண்ணன்.**

நவநிதியம் ஒரு அம்மா
பிடித்தது: புரிந்துகொள்வதும்-ஏற்றுக்கொள்வதும்.
**மகன் ராஜன்**

அனைத்துமாகி இருப்பவன் இறைவனே அனைத்தும் அவன் செயலே! என்ற உண்மையை உணர்ந்து பக்தியுடன் உயர்வான சிந்தனையும் எளிமையான வாழ்வும் வாழ்ந்து காட்டி எந்தச் செயலிலும் உண்மை அறிவு அன்பு ஆற்றல் மிளிர்ந்து இறைவழிபாடானது அவரது வாழ்க்கை.
**மகள் தயா**

அச்சா அம்மா
உங்கள் அருகில் இறுதிவரை இருக்க உங்கள் அன்பில் மகிழ வைத்த இறைவனின் வழிநடத்தலை எண்ணி மகிழ்கின்றேன்.
**மகள் பதுமநிதி**


சஞ்ஜேயின் இசைப் பேழை ‘பைரவன்’
ஆடவல்லானின் மூச்சே லயம்
நீ பக்கம் இருந்தால் யானையின் பலம்
நீ இல்லை என்றால் பூனைக்கும் பயம்
அண்டசராசரங்கள் உன்தன் வயம்
ஆடவல்லானின் மூச்சே லயம்
பாடல்:நவநிதி - கண்ணன்-இசை:சஞ்ஜே-அபிநயம்: தர்ஷனா